# ஆண்டறிக்கை–2014

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

(விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சு)

(முன்னர் - தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சு)

தொலைபேசி-011 267 6650, தொலைமடல்- 011 267 6646, மின்-அஞ்சல்:info@slic.gov.lk

# ஆண்டறிக்கை –2014

**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**

525, யூனியன் பிளேஸ், கொழும்பு – 02.

# உள்ளடக்கம்


| | | பக்க இலக்கம் |
|---|---|---|
| ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் | | |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினர்கள் | | |
| **ஆணையாளர் மீளாய்வு** | | |
| 1. | அறிமுகவுரை | 9 |
| 1.1 | இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினைப் பற்றி | 9 |
| 1.2 | நோக்கம் | 9 |
| 1.3 | பணி | 9 |
| 1.4 | பிரதான திறமுறைகள் | 9-10 |
| 1.5 | அமைப்பாண்மை கட்டமைப்பு/மனிதவளங்கள் | 11 |
| 2. | செயலாற்றுகை | 13 |
| 2.1 | பீனிக்ஸ் கருத்திட்டம்3 (மீண்டும் உயிர்த்தெழுதல்) | 13-15 |
| 2.2 | சஹசக் நிமவும் கண்காட்சி மற்றும் போட்டி | 15-21 |
| 2.3 | சந்தைப்படுத்துகை | 22-26 |
| 2.4 | புத்தாக்குனர்களுக்கு அதிகாரமளித்தல் | 26-27 |
| 2.5 | மனித எந்திரவியல் பயிற்சிப்பட்டறை | 27 |
| 2.6 | மேம்படுத்துகையும் பிரசாரமும் | 28-30 |
| 2.7 | நிதி மானியம் | 30-31 |
| 2.8 | சர்வதேச மற்றும் தேசிய அங்கீகாரம் | 32-33 |
| 2.9 | அமைப்பாண்மை அபிவிருத்தி | 33 |
| நிதி அறிக்கை | | 34-47 |
| கணக்காய்வு அறிக்கை | | 48-54 |

# ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

திரு. தீபால் சூரிய ஆராய்ச்சி.
**ஆணையாளர்**

கலாநிதி. காமிக பிரதாபசிங்க
**உதவி ஆணையாளர்**

திரு. நலின்.டி.கருணாசிங்க
**உதவி ஆணையாளர்**

திருமதி.மல்லிகா சமரவீர
**திறைசேரி பிரதிநிதி**

திரு.டி.சி.எ.சந்ருகலாசிங்க
**பணிப்பாளர் (சி.நி.அ)(பதில்).**

திரு.எ.கே.பி.பீரீஸ்
**உள்ளக கணக்காய்வாளர்**
**தொழில்நுட்பவியல் ஆராய்ச்சு அமைச்சு**

திருமதி.சுஜீவா.டி.சில்வா
**கணக்காய்வாளர் நாயக திணைக்கள பிரதிநிதி**

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினர்கள்

திருமதி.மல்லிகா சமரவீர
**திறைசேரி பிரதிநிதி**

கலா.காமிக பிரதாபசிங்க
**உதவி ஆணையாளர்**

திரு.நலின்.டி.கருணாசிங்க
**உதவி ஆணையாளர்**

திரு.ஏ.கே.பி.பீரிஸ்
**உள்ளக கணக்காய்வாளர்**
**தொழில்நுட்பவியல் ஆராய்ச்சு அமைச்சு**

திருமதி.சுஜீவா.டி.சில்வா
**கணக்காய்வாளர் நாயக திணைக்கள பிரதிநிதி**

# ஆணையாளர் மீளாய்வு

ஒரு நடுத்தர வருமானத்தை பெறுகின்ற ஒரு பொருளியலை நோக்கி நாடொன்று நகரும்போது அப்பொறியிலிருந்து தப்பிப்பதற்கான திறமுறைகளில் புத்தாக்கம் ஒன்றாக அமைகின்றது. மனித வரலாற்றினை ஆதியிலிருந்து நாம் நோக்கி புதிது புனைதலானது மனித நாகரீகத்தை முன்னோக்கி நகர்த்துவதாகவும் அத்துடன் பொருளியல் நடவடிக்கைகளை வேகப்படுத்துவதாகவும் அமைகின்றது. இங்கு கூறப்பட்ட இந்த மிகப்பெரிய உண்மையில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் பங்கு பாராட்டகுரியதாக அமைகின்றது.

2011 ஆம் ஆண்டு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு ஒரு புதிய நோக்கு மற்றும் பணியினை நாம் அமைத்தோம்.

- தேசத்திற்கு புத்தாக்க செயற்றிறனை கொண்டு வருவதில் தலை சிறந்த உந்து விசையாளராக இருத்தல்.
- கருத்துகளை செயல் முறைசார் பிரயோகங்களில் மாற்றீடு செய்வதற்கு துணைமை செய்யும் செயன் முறையின் முன்னோடியாக இருத்தல்.

ஆணைக்குழு தாபிக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க சட்டத்தின் சகலவற்றையும் உள்ளடக்கிய குறிக்கோள்களை முன்னோக்கி நகர்த்திச் செல்வதற்கு ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் சகல நடவடிக்கைகளும் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்து பிரதான பரப்பெல்லைக்குள் அடக்கப்படுகின்றது. இந்த பிரதான பரப்பெல்லைகள் சட்டத்தின் குறிக்கோள்களுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றது என்ற விபரமானது இந்த அறிக்கையின் 10 ஆம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ளது.

## ஐந்து முக்கிய பரப்பெல்லைகள்

- புத்தாக்கங்களின் தர மேம்படுத்துகை
- புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்துதல்
- புத்தாக்குனர்களுக்கு அதிகாரமளித்தல்
- ஆணைக்குழுவின் நடவடிக்கைகளின் நிலைபெறு தகைமை
- பதவியணியினரின் செயற்றிறன் விருத்தி

இந்த முக்கிய ஐந்து பரப்பெல்லைகளின் கீழ் ஆணைக்குழுவானது செயலாற்றுகை செய்தமை தொடர்பிலான விரிவான விபரங்கள் இந்த ஆண்டறிக்கையில் தரப்பட்டுள்ளன.

இந்த வருடத்தின் முக்கிய திருப்புமுனை விடயங்களாக கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்களை கருத்திற்கொள்ளலாம்.

- 2013 ஆம் ஆண்டின் "சஹசக் நிமவும்" தேசிய கண்காட்சியின்போது பாதிப்பிற்குட்பட்ட புத்தாக்குனர்களுக்கு நியாயமான மற்றும் சரிசமமான முறையில் நஷ்ட ஈடு வழங்கல்.
- ஜெனிவா சர்வதேச கண்காட்சியில் தங்கம் அல்லது வெள்ளி விருதுகளை வெற்றிகொண்ட வெற்றியாளர்களுக்கு விமான நிலையத்திலுள்ள அதி முக்கிய பிரமுகர்களுக்கான ஓய்வறையில் வரவேற்பு அளிக்கப்பட்டமையும் அவர்களை அங்கீகரிக்குமுகமாக விசேட நிகழ்வுகள் நடாத்தப்பட்டமையும் ஆகும். இது புத்தாக்குனர் சமூகத்தில் அவர்களுடைய மதிப்பினை அதிகரிப்பதற்கு ஏதுவாக அமையும்.
- 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டின் ஜனாதிபதி விருதுகளை முன்னளிப்புச் செய்தல்.
- சஹசக் நிமவும் கண்காட்சியை வெற்றிகரமாக பூரணப்படுத்தியமை. இக்கண்காட்சியில் இன்னும் தரமான புத்தாக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- இலங்கையின் முதன்மையான புத்தாக்குனரான வித்யா ஜயோதி கலாநிதி. ரே. விஜயவர்தன அவர்களை அங்கீகரிக்கும் முகமாக ஒரு ஞாபகார்த்த முத்திரையினை வெளியிடுதல்.

- புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்துவதற்கு நிதி உதவிகளை பெற இருப்பவர்களை தெரிவுசெய்யும் செயன்முறையினை மேலும் திறமையுள்ளதாய் ஆக்குதல்.

- தனியார்த்துறை அமைப்பாண்மையுடன் அநேகமான பங்குடைமைகளை தாபித்தல். இது அநேகமான புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களை முன்னேற்றுவதற்கு ஏதுவாக அமையும்.

- பல வருடங்களுக்குப் பின்பு ஒரு முழுநேர பணிப்பாளர் / சிரேட்ட நிறைவேற்று அலுவலர் மற்றும் ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழு ஒன்று தாபிக்கப்படல்.

- சட்டத்திற்கு பிரேரிக்கப்பட்ட மாற்றங்கள் தொடர்பில் அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டதினால் அது சமூக பொருளாதார நிலைமைகளின் மாற்றங்களுக்கு தொடர்புள்ளதாய் அமையும்.

- பதவியணியினருக்கு அநேகமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

- நிறுவகத்திற்குள் எமது செயற்பாடுகளை மேலும் வினைத்திறன் கொண்டதாகவும் விடயத்துடன் தொடர்புடையதாகவும் ஆக்குவதற்கு அவை தொடர்பிலிருக்கின்ற செயன்முறைகள் இன்னும் கடுமையுள்ளதாக்கல்.

புத்தாக்குனர்களிடையே சார்ந்திருத்தல் மனப்பக்குவத்தை மேம்படுத்துவதை விட நாம் எமது நடவடிக்கைகளினூடாக உகந்த சூழல் முறைமையை உருவாக்குவதற்கே முயற்சி செய்கிறோம். ஏனெனில், தனி ஒரு நிறுவனத்தினால் சகல புத்தாக்குனர்களுக்கும் அர்த்தமுள்ள வகையில் உதவிசெய்ய முடியாது. ஆயினும், அதேவேளையில் பரந்த அளவினதாய் உள்ள ஒரு சமூகமானது புத்தாக்கங்களுக்கும் அப்புத்தாக்கங்கள் சந்தைப்படுத்துகை செய்யப்படுவதற்கும் ஒரு வெற்றிடத்தை உருவாக்குதல் வேண்டும் என்று நாம் நம்புகின்றோம்.

சகல புத்தாக்குனர்களும் வினைமுயலுனர்கள் அல்ல. மேலும் புத்தாக்கங்களை சந்தைப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கும் ஒரு முதலீட்டு சமூகத்தினர் இருப்பது என்பது உண்மையே. பேணிப் பாதுகாத்தலின் நிமித்தம் வினைமுயலுனர்களின் குடும்ப அங்கத்துவத்தைச் சார்ந்த முதலீட்டாளர்கள் மற்றும் கூட்டறவு அநுசரனையாளர்களை ஊக்குவித்தல் சிக்கலானதாகும். வினைமுயலுனர்களின் குடும்ப அங்கத்தவர்களைச் சார்ந் முதலீட்டாளர்களுக்கு வரி ஊக்குவிப்பினை வழங்கவேண்டுமென்ற எமது பிரேரனையாது, பொருளியல் திட்டமிடல் செயன்முறையில் உரிய கவனத்தை பெறப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

காப்புரிமை வழங்குதலின் ஊடாக புத்தாக்குனர்களுக்கு அவர்களுடைய அதி புலமைச் சொத்துரிமையை பாதுகாக்க நாம் ஊக்குவிக்கின்றோம். தேசிய கண்காட்சியில் ஒரு சாவடியினை நடாத்துவதற்கு NIPO விற்கு அழைப்புவிடுத்தல் மற்றும் எமது வலைக்கடபீடத்தின் ஊடாக வழிகாட்டல்களை வழங்கல் என்பன இந்த ஊக்குவிப்புகளில் சிலவாகும். எவ்வாறாயினும், காப்புரிமை ஒன்றை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படும் காலவரையரையை புத்தாக்குனர்கள் தமது கவனத்தில் கொள்ளுவர்.

## நன்றி நவிலல்

எமக்குரிய கடமைகளை தேசத்திற்கு முன்வைப்பதில் விசேட பங்களிப்பை வழங்கிய கீழ் குறிப்பிடப்பட்டவர்களுக்கும் மற்றும் அமைப்பாண்மைகளுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும் நன்றிகளையும் மிகு விருப்பத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னைய அமைச்சர் கௌரவ. பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களால் வழங்கப்பட்ட சகல வழிகாட்டல், உறுதுணை மற்றும் ஊக்குவிப்புகளுக்கு.,

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் திருமதி. தாரா விஜயதிலக்க அவர்களினால் சட்டத்தை மாற்றுவதில் அளிக்கப்பட்ட மிகப்பெரிய அளவிலான பங்களிப்பிற்கும் மற்றும் ரே. விஜயவர்தன அவர்களின் முத்திரையை வெளியீடு செய்வதிலும் அத்துடன் ஆணைக்குழுவின் சகல பணிகளையும் உள்ளடக்கிய வகையில் அவராலும் அவரது பணிசெய் குழுவினராலும் வழங்கப்பட்ட வழிகாட்டல் மற்றும் உதவிக்கும்.,

புத்தாக்குனர்களின் சார்பில் எம்மால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு உகந்த முறையில் துலங்கிய, தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் அகப்பாட்டு எல்லைக்குள் அடங்கும் நிறுவனங்களின் தலைமைத்து பதவியை வகிப்போருக்கும்.,

எமது புத்தாக்குனர்களுக்கு தாமே விரும்பி முன்வந்து தமது உதவியை வழங்கிய தனியார் துறை அமைப்பாண்மைகளுக்கும்.,

பள்ளிக்கூடங்கள் மற்றும் பல்கலைக்கழக முறைமையில் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்கு தமது விசேட பங்களிப்பினை வழங்கிய கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சுக்கும்.,

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கும் அதனை சார்ந்த புத்தாக்குனர்களுக்கும் மிகு தாரளமனப்பான்மையுடன் பிரசாரங்களை வழங்கிய ஊடகத்தினருக்கும்.,

எப்போதுமே எம்முடன் ஒரு பங்குடமையாளர் என்ற வகையில் பணியாற்றுபவர்களும் இந்த அமைப்பாண்மையின் நோக்கத்தினராகவும் கருதப்படும் புத்தாக்குனர்களுக்கும்.,

புத்தாக்குனர்களின் சமர்பிக்கப்பட்டவைகளை தமது நேரத்தையும் நிபுணத்துவத்தையும் விரயம் செய்து மதிப்பீடு செய்த நடுவர் குழாமிற்கும்.,

ஆணைக்குழுவின் ஆரம்ப காலந்தொட்டே அயராது தமது உழைப்பை வழங்கிய சபை உறுப்பினர்களுக்கும்.,

இறுதியாக எந்த மட்டுப்படுத்தல்களையும் கருத்திற்கொள்ளாது உயர்ந்த தரத்தை அடைதலை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டதுடன் குழுவேலை மற்றும் ஈடுபாட்டுடனும் துணிவுடனும் பணியாற்றல் போன்றவற்றிற்கு உதாரணங்களாய் இருக்கின்ற இலங்கை புத்தாக்குனர் குழுவின் பணியாளர்களான எனது குழுவினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும் நன்றிகளையும் மிகு விருப்பத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தீபால் சூரியஆரச்சி

# ஆணையாளர்

# 1. அறிமுகவுரை

## 1.1 இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினைப் பற்றி

1979 அம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைவுற தாபிக்கப்பட்ட இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது ஒரு நியதிச் சட்ட சபையாகும். இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு தாபிக்கப்பட்டதன் முதன்மை குறிக்கோளானது தேசத்தின் புத்தாக்கற்திறனை தொழில் நுட்ப, நிதி மற்றும் சட்ட உதவிகளை வழங்குதல் மூலம் மேம்படுத்தலாகும். ஆணைக்குழுவானது ஒரு ஆணையாளரையும் இரு உதவி ஆணையாளர்களையும் உறுப்பினர்களாக கொண்டுள்ளது. நேர் அமைச்சின் பரிந்துரைப்பின் கீழ், அமைச்சரவையின் அமைச்சர்களால் 03 வருட காலத்திற்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படுவர். இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது 2010 ஆம் ஆண்டிலிருந்து தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் செயற்படுகிறது. இலங்கை புத்தாக்குனர் ஆணைக் குழுவினால் விருத்தி செய்யப்பட்ட கூட்டுறவு திட்டத்திற்கு அமைவுற இலங்கை புத்தாக்குனர் ஆணைக் குழுவின் குறிக்கோள்களை சாதிப்பதற்கு 2012 - 2014 ஆம் காலப்பகுதிக்குள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

## 1.2 நோக்கு

புதியகண்டு பிடிப்புகள் மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக சுபீட்சத்தை காணல்

## 1.3 பணி

❖ தேசத்திற்கு புத்தாக்க செயற்றிறனை கொண்டு வருவதில் தலை சிறந்த உந்து விசையாளராக இருத்தல்.

❖ கருத்துகளை செயல் முறைசார் பிரயோகங்களில் மாற்றீடு செய்வதற்கு துணைமை செய்யும் செயன் முறையின் முன்னோடியாக இருத்தல்.

ஆணைக்குழுவானது ஒரு தேசிய நிறுவனமாக இருப்பதினால் ஒரு உகந்த சூழ்நிலையினை உருவாக்குவதில் அதனால் ஆற்றப்பட வேண்டிய பங்களிப்பினை விளங்கிக் கொண்டதன் காரணமாக, மேற்கூறப்பட்ட பணியானது ஆணைக்குழு வினால் சேர்த்துக் கொள்ளப்பட்டது. மனிதவலு மற்றும் நிதி என்பன ஆணைக்குழுவிடம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருப்பதினால் ஆணைக்குழுவினால் ஆற்றப்பட வேண்டிய மேற் கூறப்பட்ட பங்களிப்பானது நடைமுறைப்படுத்தப்படுவதற்கு நீண்ட காலம் செல்லும். புத்தாக்கம் மற்றும் புதிது புனைதல் எனும் துறையில் புதிது புனைதல் செயன்முறைக்கு ஒரு சமூகத்திலிருந்து மூன்று காரணிகள் பங்களிப்பு செய்யப்படுகின்றன என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய தொரு வெளிப்படையான உண்மையே. அவையாவன பொருளியல் நிலைமை, புத்தாக்கத்தை பற்றி சமூகத்தின் நோக்கு மற்றும் மக்களின் கல்விமட்டம் அல்லது அவர்கள் சமூகத்திற்கு தம்மை வெளிப்படுத்தும் அளவு என்பனவாகும். ஆணைக்குழுவான பின்னிரண்டு காரணிகளிலும் தனது அதிக கவனத்தை செலுத்தியுள்ளது..


## 1.4 பிரதான திறமுறைகள்

- ❖ காப்புரிமை அளிக்கப்பட்ட புத்தாக்கங்களுக்கு ஜனாதிபதி விருது.
- ❖ புதிது புனைதல் மற்றும் புத்தாக்கங்களுக்கான 'சஹசக் நிமவும்' தேசிய கண்காட்சி.
- ❖ பள்ளிக்கூட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஊக்கமளித்தலும் மின்னணுவியல் ஊடகத்தின் வலுவினை மேம்படுத்தல்.
- ❖ புத்தாக்குனர்கள் நிதியம் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் தனியார் துறையினரை அணுகுவதற்கும் உதவியாக இருத்தல்.
- ❖ அறிவினை வழங்கவும் நிபுணர்களை அணுகவும் புத்தாக்குனர்களுக்கு அதிகாரமளித்தல்.
- ❖ பிரதான இயலுனராக வலைக்கடபீடத் திறமுறை.
- ❖ புத்தாக்குனர்களுக்கு சர்வதேச அங்கீகாரம்.
- ❖ நடப்பு நிலையின் பிரச்சனைகளை விளிக்கும் முகமாக சட்டத்தை இற்றைப்படுத்தல்.
- ❖ பதவியணியினரின் செயற்றிறன் விருத்தி.
- ❖ வலுவுள்ள ஆளுகை சட்டகம்.

**அட்டவணை 1:இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால இனம்காணப்பட்ட முக்கிய பரப்பெல்லைகள்**

| முக்கிய பரப்பெல்லைகள் | தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்கள் |
|---|---|
| புத்தாக்கங்களின் தரமேம்படுத்துகை | • பள்ளிக்கூட மட்டத்து நிகழ்ச்சித்திட்டங்களுக்கு புத்துயிர்பூட்டல். மின்னுவியல் ஊடகங்களின் வலுவினை மேம்படுத்தல்.<br>• பிரதான இயலுனராக வலைக்கடபீடத் திறமுறை. |
| வர்த்தகமயப்படுத்துகை | • புத்தாக்கங்கள் மற்றும் புதுமை படைத்தலிற்கு "சஹசக் நிமவும்" தேசிய கண்காட்சி.<br>• புத்தாக்குனர்கள் தனியார் துறையினரிடமிருந்தும் வேறு அமைப்பாண்மைகளிடமிருந்தும் நிதியங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நுழைவு வழியாக இருத்தல். |
| புத்தாக்குனர்களுக்கு அதிகாரமளித்தல் | • காப்புரிமை பெற்ற புத்தாக்கங்களுக்கு ஜனாதிபதி விருது.<br>• புத்தாக்குனர்களுக்கு சர்வதேச அங்கீகாரம்.<br>• புத்தாக்குனர்களுக்கு அறிவையும் நிபுணத்துவத்தையும் வழங்குவதனூடாக அவர்களுக்கு அதிகாரமளித்தல். |
| செயற்றிறன் விருத்தி | • பதவியணியினருக்கு செயற்றிறன் விருத்தி.<br>• வலுவுடைய ஆளுமைச் சட்டகம்.<br>• நடப்பு தேவைப்பாடுகளை பிரதிபலிக்கும் முகமாக சட்டத்தை அவ்வப்போது இற்றைப்படுத்தல். |

### 1.5 அமைப்பாண்மை கட்டமைப்பு/மனிதவளங்கள்




**உரு 1: பதவிகளின் வழிவரைப்படம்**

**அட்டவணை 2:அங்கீகரிக்கப்பட்ட பதவியணி**

| பதவி | அங்கீ. பத. உள்ள எண். | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண். |
|---|---|---|---|
| பணிப்பாளர் (சி.நி.அ) | 01 | 01 | - |
| பிரதி பணிப்பாளர் / உதவி பணிப்பாளர் (கருத்திட்டம்) | 01 | 01 | - |
| பிரதி பணிப்பாளர் / உதவி பணிப்பாளர் (நிதி) | 01 | 01 | - |
| நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | 03 | 02 | 01 |
| நிர்வாக அலுவலர் | 01 | 01 | - |
| கணக்கியல் / நிதி அலுவலர் | 01 | 01 | - |
| ஆராய்ச்சி உதவியாளர் | 05 | 04 | 01 |
| முகாமைத்து உதவியாளர் | 06 | 06 | - |
| சாரதி | 03 | 03 | - |
| அலுவலக உதவியாளர் | 02 | 01 | 01 |
| மொத்தம் | 24 | 21 | 03 |

# செயலாற்றுகை-2014


### 2.1 பீனிக்ஸ் கருத்திட்டம் (மீண்டும் உயிர்த்தெழுதல்)


முன்னைய ஆண்டறிக்கையில் குறிப்பிட்டது போன்று 2013 ஆம் ஆண்டின் சஹசக் நிமவும் தேசிய கண்காட்சியில் துரதிஷ்டவசமாக ஏற்பட்ட தீயின் காரணமாக அநேக எண்ணிக்கையான புத்தாக்கங்கள் சேதத்திற்குட்பட்டன இதனைத் தொடரந்து அந்த நிலைமையானது, புத்தாக்குனர்களின் ஊக்கத்திற்கு ஊறு விளைவிக்காத வகையிலும் மற்றும் பொது மக்களிடத்தே இவ்விடயம் தொடர்பில் ஒரு பாதகமான அபிப்பிரயாயம் ஏற்படாத வகையிலும் கையாண்ட அதேவேளையில் புத்தாக்குனர்களின் மூலவகை மாதிரிகளை புதுப்பிப்பதற்கு நாம் உதவியாக இருந்ததுடன்

இவ்விடயம் தொடர்பில் தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் அமைச்சர் கௌரவ.பாட்டலி சம்பிக ரணவக, அவர்களினால் தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்ட வழிகாட்டல் மற்றும் உதவிக்கு எனது நன்றியை நான் தெரிவிக்க விரும்புகிறேன்

**அட்டவணை 3:பாதிக்கப்பட்ட புத்தாக்கங்களும் பகிரப்பட்ட நிதியங்களும்**

| விவரணம் | வகுதி | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | பல்கலைக்கழகம் | திறந்த | வர்த்தகமயப்படு | |
| பாதி.புத்.எண் | 61 | 114 | 3 | 178 |
| நிதி உதவி புத்தாக்கம் | 42 | 106 | 3 | 151 |
| வழங்கப்பட்ட பணத்தொகை | Rs.1262601.00 | Rs.2986791.50 | Rs.175850.00 | Rs.4425242.50 |
| பெற்று.மேன்முறையீடுகள் | 0 | 6 | 0 | 6 |
| ஒதுக்கப்பட்ட மொ.தொகை | Rs.1583156.00 | RS. 2972841.50 | Rs.175850.00 | Rs.4731847.50 |





**உரு 2: நிதியம் பகிர்வு தொடர்பில் பை வரைப்படம்**

**அட்டவணை 4:உதவி வழங்கிய அமைப்பாண்மைகள்**

| நிறுவகம் | முன்னேற்றம் |
|---|---|
| வரையறுக்கப்பட்ட பிரன்டிக்ஸ் லங்கா நிறுவகம் [Disrupt-a-thon] | பிரன்டிஸ் நிறுவகத்தினருக்கு அறிமுகப்படுத்தப்பட்ட 07 புத்தாக்குனர்களுள் அயமன் பைரஸ் என்பவர் நிறுவகத்தினரால் தெரிவுசெய்யப்பட்டார் அவரின் புத்தாக்கத்தை வர்த்தகமயப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருந்ததினால் அவருடன் பிரன்டிஸ் நிறுவகம் ஒரு கூட்டு முயற்சிக்கு நிதியீடு செய்தது. |
| பிரன்டிக்ஸ் ("பங்காளர்" என்ற வகையில்) | ஐந்து புத்தாக்குனர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் ஒவ்வொருவருக்கும் ரூபாய். 25,000/- பிரன்டிக்ஸ் நிறுவகத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்டது. |
| வரையறுக்கப்பட்ட ஜினசேனா தனியார் நிறுவகம்<br>ஜினசேனா புத்தாக்க நிலையம்<br>புத்தாக்குனர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 116 புத்தாக்குனர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். அவர்கள் ஜினசேனா புத்தாக்க நிலையத்தினால் வழிநடத்தப்பட்டனர். அவர்களுள் திரு. டபிள்யூ. வெல்கம என்பவரினால் கண்டுபிடிக்கப்பட்ட சூரிய ஒளியினால் ஒளியினைப் பெறல் எனும் புத்தாக்கமானது ஜினசேனா புத்தாக்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வரவேற்பினை சிறந்த முறையில் பெற்றுக் கொண்டது. 2014, யூலை - திசெம்பர் வரையில் 168 விளக்குகள் அவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினூடே அது பகிரப்பட்டது |
| நெஸ்லே லங்கா நிறுவகம் | திரு. பிரின்ஸ் சந்ரசேனாவின் Dipping Cooler வர்த்தகமயப்படுத்தலுக்கு உகந்ததாகக் கருதப்பட்டது. |
| புத்தி கைத்தொழிற்துறை | மூலவகை மாதிரியை விருத்தி செய்வதற்கு பாதிக்கப்பட்ட 03 புத்தாக்குனர்களுக்கு மானியத்தொகை காசாக வழங்கப்பட்டது. |



புத்தி கைத்தொழிற்துறையின் முகாமைத்துவ பணிப்பாளர் திரு.வி.கே.மஹிமாபால அவர் உதவி வழங்கிய புத்தாக்குனர்களுடன் ஒரு கலந்துரையாடலில் இருக்கின்றார்.





புத்தாக்கத்தை விருத்தி செய்வதற்காக திரு.மஹிமாபால தெரிவுசெய்யப்பட்ட புத்தாக்குனர்களுக்கு காசினை வழங்குகிறார்.

## 2.2 சஹசக் நிமவும் கண்காட்சி மற்றும் போட்டி

இது ஆணைக்குழுவின் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும்.

இது மிக முக்கியமான கண்காட்சி என்று கூறப்படுவதை விட, திறமைமிகு புத்தாக்குனர்களை இனம்காண்பதுடன் அவர்கள் செயலூட்டற் திறன்மிகு முதலீட்டாளர்களை தேடிக்கொள்ளவும் மற்றும் தேசத்திற்கு புதியன கண்டுபிடித்தலை வழங்குவதற்கும் ஒரு காட்சிப்படுத்தலை ஏற்படுத்திக் கொடுக்கும் இந்த நிகழ்வு ஒரு தேசிய நிகழ்வு என்ற அடிப்படையில் கருதப்படும். 03 வருடங்களாய் நடந்துவரும் இவ் சஹசக் நிமவும் கண்காட்சி இந்த மூன்று வருடங்களுக்குப் பின்பு தற்போது புதிது புனைதல் மற்றும் புத்தாக்கங்களுக்கான மிகு குறிப்பிட்டு சொல்லத்தக்கதொரு தேசிய கண்காட்சி என்ற வகையில் அங்கீகரிக்கப்படுகின்றது. ஆணைக்குழுவினால் சேர்த்துக்கொள்ளப்பட்ட விரிவான தரம்மிகு திறமுறைகளின் காரணமாக இந்த கண்காட்சியினால் சாதிக்கப்பட்ட சாதனைகளுக்கு மிகுந்த அளவில் அங்கீகாரம் வழங்கப்படுகின்றது.

ஆணைக்குழுவின் சூழலியல் முறைமை அபிவிருத்தி திறமுறையில் சஹசக் நிமவும் கண்காட்சியானது ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட பகுதியாகும். இந்த செயன்முறையின் பிரதான மூலக்கூறானது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது.




**உரு 3: சஹசக் நிமவும் வழிவரைப்படம்**

நான்கு வகுதிகளின் கீழ் கண்காட்சி நடாத்தப்பட்டதுடன் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த 14 துறைகளின் கீழ் காட்சிப்படுத்தப்பட்டவை மதிப்பீடு செய்யப்பட்டன. இதைவிட சகலவற்றையும் உள்ளடக்கிய அடிப்படையில் ஐந்து விசேட பரப்பெல்லைகளின் கீழ் மிகச்சிறந்த புத்தாக்கங்களும் தெரிவுசெய்யப்பட்டன.

**அட்டவணை 5: சஹசக் நிமவும் கண்காட்சியில் தொழில்நுட்பவியல் துறைகள்**

| | |
|---|---|
| தொழில்நுட்பத்துறை அ | அங்கவீனமுற்றோரை சுயாதீனமாக இயங்கக்கூடியதாக்கல். |
| தொழில்நுட்பத்துறை ஆ | சூழல் - மாசுறல் தடுப்பு / சூழல் பாதுகாப்பு / சூழல் நட்பு உற்பத்திகள் / சூழல் தன்மைகளினை மேம்படுத்தல். |
| தொழில்நுட்பத்துறை இ | உணவு - பானம் / போசனை சாலை கருவிகள் / உணவுப் பாதுகாப்பு / பாரம்பரிய உணவுப்பொருட்களை நவீன மயப்படுத்தல். |
| தொழில்நுட்பத்துறை ஈ | விவசாயம் - தோட்டக்கலை வளர்ப்பு / தோட்டத்துறை |
| தொழில்நுட்பத்துறை உ | சுகாதாரமும் போஷனையும் - மருத்துவம் / சுகாதாரம் / அறுவை / மருத்துவ உபகரணங்கள் |
| தொழில்நுட்பத்துறை ஊ | சக்தி - சக்தி பாதுகாப்பு கருவிகள் / புதிய சக்தி மூலங்கள் / புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள் |
| தொழில்நுட்பத்துறை எ | குடியிருப்பு - கட்டிடக்கலை / மரவேலை / இரும்புவேலை / கட்டிடங்கள் / தளபாடங்கள் |
| தொழில்நுட்பத்துறை ஏ | போதனா கருவிகள் - எண் கணிதம் மற்றும் விஞ்ஞானம் தொடர்பிலான கருதுகோல்கள் மற்றும் கோட்பாடுகளை போதிப்பதற்கு அல்லது சுயமாக கற்பதற்கு கருவிகள் அல்லது மென்பொருள் வசதிகள் |
| தொழில்நுட்பத்துறை ஐ | பாதுகாப்பு மற்றும் காப்பு - எச்சரிக்கை மணி / மீட்பு / முன்னறிவித்தல் / அனர்த்த முன்னேற்பாடு |
| தொழில்நுட்பத்துறை ஒ | புடவைகள், ஆடைகள் மற்றும் துணையுருப்புக்கள் - ஆபரணங்கள் / கைப்பணிப் பொருட்கள் |
| தொழில்நுட்பத்துறை ஓ | தொடர்பாடல் மற்றும் கேளிக்கை - பிரசாரம் / அச்சிடல் / பொதியிடல் / விளையாட்டுகள் / விளையாட்டுத்துறை / விளையாட்டுப் பொருட்கள் / வரைதல் |
| தொழில்நுட்பத்துறை ஔ | போக்குவரத்து - மோட்டார் வாகனம் / கடல்வழி / வான்வழி |
| தொழில்நுட்பத்துறை ஃ | நீர் - நீர் பேணுகை / நீர் தூய்மைப்படுத்தல் / நீர் மாசுறலை தடுத்தல் / நீர் பாவனையைக் குறைத்தல் |


## தேசிய ரீதியாக முக்கியத்துவம் பெற்ற துறைகள்

1).தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
2).பாரம்பரிய அறிவு
3).மின்னனுவியல்
4).இறக்குமதி பதிலீடுகள்
5).நனோ தொழில்நுட்பம்

இந்த கண்காட்சியின் பிரதான சிறப்பியல்பானது, பள்ளிக்கூட மட்ட புத்தாக்கங்களை தெரிவுசெய்வதற்கு மாகாண மட்ட போட்டிகளை நடாத்துதல்.

நிபுணத்துவம் மிகுந்த ஒரு குழுவினர் நாட்டிலுள்ள சகல 09 மாகாணங்களுக்கும் விஜயம் செய்து சமர்ப்பிக்கப்பட்ட 1300 விண்ணப்பங்களை மதிப்பீடு செய்தனர். கல்வி அமைச்சு அதனது இல. 2006/23 சுற்றறிக்கையினூடாக நெறிப்படுத்திய போதிலும் பள்ளிக்கூட புத்தாக்குனர் கழகங்களின் செயற்பாடுகளின் மட்டமானது எதிர்பார்ப்புக்களை விட குறைவாக இருந்தமையை நாம் அவதானித்தோம். இதற்கு, பொருத்தமான ஆசிரியர் பொறுப்பாக இல்லாமை, பள்ளிக்கூட முறைமைகளிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய உறுதுணை போன்ற இதர பல அக மட்டுப்படுத்தல்கள் காரணமாகலாம். எவ்வாறாயினும் மாணவர்களை பொறுத்தவரையில் அவர்கள் புவி சரிதவியல் இட அமைவை புறக்கணித்து தமது ஆக்கத் திறமையை வெளிப்படுத்தியமையை எம்மை ஊக்கப்படுத்தியமையாய் அமைந்தது.

இந்த வருடம் கனிஷ்ட பிரிவிற்கு தேசிய விருதுகள் மூன்றினை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம்.




**உரு 4: பிராந்திய மட்டத்தில் பங்குபெறுகை**




தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர் பொது மக்களுக்காக கண்காட்சியை திறந்து வைக்கின்றார்.




காட்சிப்படுத்துனர் அவரின் புத்தாக்கத்தை வருகை செய்தோருக்கு விளக்கப்படுத்துகின்றார்

## அட்டவணை 6: 2014 ஆம் ஆண்டின் சஹசக் நிமவும் கண்காட்சியின் தொகுப்பு

| தொழில்நுட்பதுறைகள் | பள்ளிக்கூடம் | | திறந்த | | நிறுவகம் | | வர்த்தகமயப்படுத்தல் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | புத்தாக்கங்கஸின் எண்ணிக்கை | வெற்றி. எண்ணிக்கை | புத்தாக்கங்கஸின் எண்ணிக் | வெற்றி. எண்ணிக்கை | புத்தாக்கங்கஸின் எண்ணிக் | வெற்றி. எண்ணிக்கை | புத்தாக்கங்களின் எண்ணிக் | வெற்றி. எண்ணிக்கை |
| அங்கவீனமுற்றோரை சுயாதீனமாய் இயங்கச் செய்தல் | 2 | 0 | 5 | 3 | 2 | 1 | 0 | 0 |
| சூழல் | 1 | 1 | 15 | 3 | 1 | 1 | 1 | 0 |
| உணவு | 1 | 0 | 10 | 3 | 1 | 1 | 10 | 3 |
| விவசாயம் | 11 | 4 | 6 | 2 | 2 | 1 | 0 | 0 |
| சுகாதரம் மற்றும் போஷாக்கு | 2 | 0 | 11 | 0 | 1 | 0 | 1 | 0 |
| சக்தி | 11 | 2 | 19 | 3 | 2 | 0 | 2 | 0 |
| குடியிருப்பு | 3 | 2 | 9 | 3 | 3 | 0 | 1 | 0 |
| போதானா கருவிகள் | 4 | 3 | 5 | 3 | 3 | 0 | 2 | 1 |
| பாதுகாப்பு | 15 | 5 | 18 | 3 | 3 | 2 | 4 | 3 |
| ஆடைகள், புடவைகள் | 0 | 0 | 8 | 2 | 0 | 0 | 2 | 1 |
| தொடர்பாடல், கேளிக்கை | 6 | 2 | 4 | 2 | 1 | 1 | 1 | 0 |
| போக்குவரத்து | 4 | 3 | 4 | 3 | 0 | 0 | 0 | 0 |
| நீர் | 3 | 1 | 1 | 0 | 1 | 0 | 4 | 2 |
| மொத்தம் | 63 | 23 | 115 | 30 | 20 | 7 | 28 | 10 |




உரு 5: ஒவ்வொரு தொழில்நுட்பத்துறைகளில் பங்குபெறல்




உரு 6: பங்குபெறுனர்களும் வெற்றியாளர்களும்

### அட்டவணை 7: காசாக வழங்கப்படும் விருதின் பெறுமானம்

| விருதின் வகை | புத்தாக்கங்களின் எண். | ஒரு புத்தாக்கத்திற்கான தொகை (ரூபா.) |
|---|---|---|
| டேசிஸ் | 01 | 750,000 |
| கனிஷ்ட டேசிஸ் | 03 | 200,000 |
| தேசிய முக்கியத்துவம் வாய்ந்த துறைகள் | 04 | 200,000 |
| வகுதி வெற்றியாளர் - முதலாவது | 24 | 100,000 |
| வகுதி வெற்றியாளர் - இரண்டாவது | 25 | 50,000 |
| வகுதி வெற்றியாளர் - மூன்றாவது | 23 | 25,000 |

விருதுகளுக்கு வழங்கப்பட்ட அநுசரனை பற்றிய விபரங்கள் வருமாறு.

### அட்டவணை 7: அநுசரனை விபரங்கள்

| அநுசரனையாயாளர் | வகுதி | தொகை (ரூபா.) |
|---|---|---|
| பிரன்டிஸ் | நீர், சுற்றாடல், சக்தி | 389,000.00 |
| வட்டவளை தோட்டத்துறை நிறுவகம் | போதனா கருவிகள் | 227,000.00 |
| வேர்ச்சுசா | பள்ளிக்கூட வகுதிக்குள் முதலாம் வரிசை | 104,000.00 |

தமது வெற்றிக்கு காரணமாக இருந்த கதையை உரையாற்றியவர்கள் இந்த விருது வைபவத்தில் கலந்துகொண்டோரோடு அதனை பகிர்ந்துகொண்டமையால் புத்தாக்குனர்களுக்கு அவர்களின் அகத்தூண்டலினை ஊக்குவிக்குமுகமாகவும் விருது வைபவம் அமைந்தது.



திரு.லலித் கஹபிடிய, சேஷ்ட நிறைவேற்று அலுவலர் / கே.ஐ,கே. தொகுதிக் கம்பனிகளின் ற்றுவிப்பாளர் தமது வெற்றியின் இரகசியத்தை பகிர்ந்துகொள்கின்றார்.




கலாநிதி.அர்ஷா சுபசிங்க, கோடேஜன் நிறுவகத்தின் சிரேட்ட நிறைவேற்று அலுவலர் தனது வேகா கருத்திட்டத்தின் கதையினை பகிர்ந்துகொள்கின்றார்.

## 2.3 சந்தைப்படுத்துகை

புத்தாக்குனர்களின் புத்தாக்கங்களை சந்தைப்படுத்துவதற்கு துணைமையாயிருத்தலே ஆணைக்குழுவினால் புத்தாக்குனர்களுக்கு உதவி செய்தல் நிமித்தம் சேர்த்துக்கொள்ளப்பட்ட பிரதான திறமுறையாகும். இதன் அடிப்படையில் தேசிய கண்காட்சிகளின்போது சாவடிகள் அமைப்பதற்கு உதவுவதுடன் வேறுபட்ட தனியார் அமைப்பாண்மைகளுடன் பங்குடைமையை கட்டியெழுப்பவும் ஆணைக்குழு உதவியாக இருக்கின்றது. இதன்கீழ் எடுக்கப்பட்ட பிரதான நடவடிக்கையானது லங்கெம் ஏஞ்சல் வலையமைப்புடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையாகும். லங்கெம் ஏஞ்சல் வலைமைப்பு நிறுவகத்தினர் செயலூட்டற் திறன்மிகு புத்தாக்குனர்களை மதிப்பீடு செய்து அவர்களுடன் முதலீட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் தமது கவனத்தில் செலுத்துவர். இச் செயன்முறையின் கீழ் எடுக்கப்பட்ட படிமுறையானது கீழ்க் குறிப்பிடப்பட்ட தலையங்கங்களை உள்ளடக்கிய வகையில் லங்கெம் ஏஞ்சல் வலையமைப்பின் நிபுணர்களால் முன்னெடுக்கப்பட்ட அறிவினை பகிரும் ஒரு கூட்டத்தொடராகும். சிறந்த பெறுபேறுகளை சாதிக்கும் பொருட்டு பங்குபெறுனர்களுக்கு சமநேரத்தில் மொழிபெயர்ப்புகள் சமநேரத்தில் மொழிபெயர்புகள் வழங்கப்பட்டன.



Moment of a mock session


கருத்தரங்கில் பங்குபற்றியவர்கள்

சிலிம்டெக் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற நனோ தொழில்நுட்பம் மற்றும் பேணிப் பாதுகாக்கும் வசதி என்பவை தொடர்பிலான கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு மேற்கூறப்பட்ட நிகழ்விற்கு விஜயம் செய்வதற்கு முன்பு சிலிம்டெக் நிறுவகத்திற்கு 80 புத்தாக்குனர்கள் விஜயம் செய்தனர். கூட்டத்தொடரின் முடிவில் அவர்களால் ஒரு வியாபாரி ஆகுவதற்கு ஆயத்தமாக இருக்கின்றார்களா என்பதனை அறிந்துகொள்ளும் பொருட்டு ஒரு சுய மதிப்பீட்டு கேள்விக் கொத்துக்கள் பங்குபெறுனர்களுக்கு வழங்கப்பட்டது. அவற்றுள் தம்மை முன்னளிப்பு செய்துகொண்ட 20 பேருக்கு எவ்வாறு ஒரு வியாபார கருத்திட்டமானது விருத்தி செய்யப்படல் வேண்டும் என்ற வழிகாட்டல் வழங்கப்பட்டதுடன் முதலீட்டாளர்களை தொடர்புபடுத்திய வகையில் லங்கெம் ஏஞ்சல் வலையமைப்பும் இலங்கை புத்தாக்குனர் கழகமும் சிலிம் உடன் கூட்டிணைந்து அநேக கூட்டத்தொடர்களை நடாத்தினர். லங்கெம் ஏஞ்சல் வலையமைப்பினால் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்ட இறுதி கூட்டத்தொடரிற்கு இந்த 20 புத்தாக்குனர்கள் 08 புத்தாக்குனர்களாக குறும்பட்டியல் செய்யப்பட்டனர். அவர்களுள் ஒரு புத்தாக்குனர் அவரின் புத்தாக்கத்திற்காக US$ 65,000 இனை பெற்றுக்கொள்வதற்கு இயலும் தன்மை கொண்வராக உள்ளார்.

இந்த புத்தாக்குனருக்குத் தேவைப்படக்கூடிய ஆராய்ச்சி சான்றிதழ்களை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஏற்படக்கூடிய செலவினங்களை இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு தாங்கிக்கொண்டதுடன் தற்போது அவர் லேன் ஏஞ்சல் வலையமைப்புடன் இணைந்து செயலாற்றுகிறார்.

இது புத்தாக்குனர்களுக்கு ஒரு புதிய அனுபவம் என்பதுடன் ஆணைக்குழுவினை பொறுத்தவரையில் இது ஒரு புது அனுபவமே. அத்துடன் புத்தாக்கமொன்று வியாபாரம் ஆகுவதற்கான விகிதத்தையும் இது காட்டுகின்றது.



இங்கு கூறப்பட்ட இந்த புத்தாக்குனரின் பெயர் செக்கி லத்தீப் ஆகும் இவருக்கு 20 வயது. பலவகையான தோல் நோய்பளை குணமாக்கக்கூடிய தோளிற்கு பூசக்கூடிய பசையை கண்டுபடித்தமையே இவரின் புத்தாக்கமாகும். இவர் போராதெனிய தேசிய பள்ளிக்கூடத்தில் கல்வி பயிலும் காலத்தில் இவரது கல்விப் பொது தராதர உயர்தர வகுப்பிற்குரிய கருத்திட்டத்தின் கருதுகோளாக கூறப்பட்ட இக்கருத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. தற்போது நுகர்வோரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவுற அவர் மூலிகையிலான பசையினை தயாரிப்பதுடன், அவருக்கு அவரது வியாபார செயல் எல்லையை விஸ்தரிப்பதற்கு விருப்பம் உடையவராக இருக்கின்றார். அவர் அவரது சொந்தக் கம்பனியான வரையறுக்கப்பட்ட செக்கி மூலிகை உற்பத்திகள் தனியார் நிறுவனம் என்ற பெயரைக் கொண்ட அவரது கம்பனியின் பதிவு தொடர்பிலான செயன்முறையினை பூரணப்படுத்தியுள்ளார். அவர் ஆயுர்வேத திணைக்களத்திடமிருந்து பரிந்துரைப்பு சான்றிதழை பெற்றுக்கொண்டுள்ளார்.




லங்கெம் ஏஞ்சல் வலையமைப்பின்
சாதனையாளர்கள்

## DISRUPT-A-THON பிரன்டிஸ் நிறுவகத்தின் விசேட வியாபார அலகு

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திட்ட இன்னுமொரு திறமுறைப் பங்காளர் பிரன்டிஸ் நிறுவகத்தினர் ஆவார்.

ஆடை கைத்தொழில் துறையில் நிலவுகின்ற அநேகமான பிரச்சினைகளுக்கு புதியன கண்டுபிடித்தல் என்ற அடிப்படையில் தீர்வுகளுடன் தம்மை நாடி வரும்படி, 21 புத்தாக்குனர்களுக்கு அவர்கள் அழைப்பு விடுத்தனர். அவர்களுள் ஐமன் பரூஸ் என்பவர் (விருதினை வெற்றி கொண்ட புத்தாக்குனர்) பிரன்டிஸ் நிறுவகத்தினால் தெரிவுசெய்யப்பட்டார். ஐமன் பரூஸ் என்பவருடன் முன்னெடுக்கப்பட்ட கூட்டு முயற்சியின் 80 வீதமான பங்கு அவருக்கே உரித்தாகும்.




டிஸ்ரப்ட் அன்லிமிட்டட் குழுவுடன் திரு. ஐமன் பரூஸ்

வரையறுக்கப்பட்ட பிரெண்டிக்ஸ் லங்கா நிறுவகம் மற்றும் வரையறுக்கப்பட்ட புத்தி கைத்தொழிற்துறை (தனியார்) நிறுவகம் என்பன கீழ் குறிப்பிடப்பட்டுள்ள புத்தாக்குனர்களுக்கு அவர்களின் மூலவகை மாதிரிகளை விருத்தி செய்வதற்கு மானியமாக பணம் வழங்கியது.

**அட்டவணை 9: மானியம் வழங்குனர் பற்றிய விபரங்கள்**

| பெயர் | புத்தாக்கம் | தொகை (ரூபா) |
|---|---|---|
| ஐமன் பிரோஸ் | Smart Intelligent Jacket | 25,000 |
| ஜி.எச்.ஜி.ஜி.எம்.சி சேனாரத்ன | Automatic Stand Iron | 25,000 |
| ஏ.வி.டி. துஷான் | Electrical Shock proof Safety Boot | 25,000 |
| ஆசிரி டி சில்வா | Novel Clothes Hanging Clips | 25,000 |
| டபிள்யூ.எஸ்.யூ.கே. விஜயசிங்க | Fully safety and Energy saving Electric Iron | 25,000 |
| ஐ.ஜி.ஆர். சுதர்ஷன | Light Rotary with a Floater for ploughing Marshy Lands | 108,000 |
| டி.எம்.சி. விஜயவர்தன | Instrument to Produce Face Bricks and Motifs | 58,500 |
| ஆர்.ஆர்.ஜி.ஏ.பி.எம். பண்டார | Special Drying Technologies for Maldives Fish Production in Sri Lanka | 25,000 |

## ஜினசேனா நிறுவகம்

ஜினசேனா புத்தாக்குனர் நிலையத்திற்கு 116 புத்தாக்குனர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுள் மேலதிக உதவி வழங்கப்படலிற்கு 08 பேர் தெரிவுசெய்யப்பட்டனர் இவர்களுள் சூரிய ஒளியின் உதவியுடன் வாசிக்கும் விளக்கினை அறிமுகப்படுத்திய திரு.டபிள்யூ.வெல்கம என்பவர் பங்குடமையின் நிமித்தம் தெரிவுசெய்யப்பட்ட இத்திட்டத்தின் கீழ் சூரிய விளக்கினை உற்பத்தி செய்வதற்கு ரூபாய். 100,000 தொகையுள்ள நிதியத்தை நிறுவகம் வழங்கியது. இந்த புத்தாக்குனரால் ஆக்கப்பட்ட சூரிய விளக்குகள் ஜினசேனா நிறுவகத்தினை சார்ந்த குழுவினரால் பின்தங்கிய கிராமங்களுக்கு பகிரப்பட்டது.



பின்தங்கிய கிராமங்களுக்கு திரு.ஜினசேனா அவர்கள் சூரிய விளக்குகளை பகிர்கின்றார்.

### AOD–வடிவமைத்தல் கல்விக்கூடம்

ஒவ்வொரு வருடமும் தெரிவுசெய்யப்பட்ட மூன்று புத்தாக்குனர்களுக்கு அவர்களின் பொதியிடல் திறமையை மேம்படுத்தும் பொருட்டு வடிவமைத்தல் தொடர்பில் உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்த திட்டத்தின் கீழ் நன்மையடைந்த புத்தாக்குனர் திரு. செக்கி லத்தீப் ஆகும்.

### INCO கண்காட்சிகள்

INCO கண்காட்சியின்போது மூன்று புத்தாக்குனர்களுக்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் இலவசமாக சாவடி வைப்பதற்கு உதவிசெய்யப்பட்டது. பொதுமக்களிடமிருந்து அநேகமான கட்டளைகளை இவர்கள் பெற்றுக்கொண்டனர்.

### சட்டத்திற்கு சீர்த்திருத்தம்

நடப்பு தேவைகளை பிரதிபலிக்கும் வகையிலும் தேசத்தின் அபிலாஷைகளோடு ஒத்திணங்கும் வகையிலும் சட்டமானது சீர்த்திருத்தி எழுதப்படல் வேண்டும். பிரேரிக்கப்பட்ட மாற்றங்களாவன அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் தற்போது அது முற்போந்த நடவடிக்கைகளின் நிமித்தம் சட்ட வரைஞர்கள் திணைக்களத்தில் உள்ளது. ஆணைக்குழுவின் வரலாற்றை பொறுத்தவரையில் இது குறிப்பிட்டு சொல்லத்தக்கதொரு விடயமாகும்.

### 2.4புத்தாக்குனர்களுக்கு அதிகாரமளித்தல்

சிறந்த தராதரமுடைய அங்கீகரிக்கப்பட்ட சாதனங்களாவன சஹசக் நிமவும் கண்காட்சியில் டேசிஸ், பிராதான துறைகள் மற்றும் தொழில்நுட்பத்துறையில் முதலாவது இடம் என்பனவற்றை தட்டிக்கொண்ட வெற்றியாளர்களுக்கு அவர்களின் தொடர்பாடல்களின்போது பயன்படுத்தப்படுவதற்கு வழங்கப்பட்டது.




Branding materials



எஸ் என் கண்காட்சியில் கபில டி. சில்வா பெற்றுக்கொண்ட அங்கீகாரமானது, மின்னியல் மோட்டார் வாகன உற்பத்தி வியாபாரத்தை இலங்கையில் அவர் பதிவுசெய்வதற்கு ஆதரவாக அமைந்தது.

விருது பெற்ற இரு வெற்றியாளர்கள் எஸ்.எல்.எப் கற்கை நெறியில் அவர்களின் தொழில்நுட்ப மாற்றீட்டைப் பற்றி போதிப்பதற்கு அழைக்கப்பட்டனர். இது, சிறிய நடுத்தர வினைமுயலுமைகளில் முதலீடு செய்வதற்கு விருப்பம் கொண்டுள்ள முதலீட்டாளர்கள் நிமித்தம் மேற்கொள்ளப்பட்டதாகும்.


### சம்பத் சவிய மற்றும் சௌபாக்கிய - CBSL

மேற்கூறப்பட்ட அமைப்பாண்மையால் நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகளில் கலந்துகொள்வதற்கு 30 புத்தாக்குனர்கள் அழைக்கப்பட்டதுடன், இந்த நிகழ்ச்சித்திட்டங்களாவன சிறிய நடுத்தர வினைமுயலுனர்களை விருத்திசெய்வதை நோக்காகக் கொண்டுள்ளது.



### 2.5 மனித எந்திரவியல் பயிற்சிப்பட்டறை

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, விஞ்ஞான கிழமைக்கு இணைவாக ஒரு மனித எந்திரவியல் பயிற்சிப்பட்டறையை மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் மின்னனுவியல் மற்றும் தொலைதொடர்பாடல் எந்திரவியல் திணைக்களத்துடன் கூட்டிணைந்து, 2014.11.08 ஆம் திகதி அன்று தேசிய விஞ்ஞான மன்றத்தின் கேட்போர் கூடத்தில் முன்னெடுத்தது. இந்த பயிற்சிப்பட்டறையின்போது தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் 31 பேரும் மற்றும் 21 ஆசிரியர்களும் அத்துடன் ஏனைய புத்தாக்குனர்களும் சிறப்பாக தமது பங்களிப்பை வழங்கினர்.



நடவடிக்கைகளில் மாணவர்களின் பங்குபெறுகை



அறிவுறுத்துனர்களுக்கு மாணவர்கள் செவிமடுக்கும்போது

## 2.6 மேம்படுத்துகையும் பிரசாரமும்

புத்தாக்கங்களை மேம்படுத்தும் பொருட்டு ஆணைக்குழுவானது அச்சிடல் மற்றும் மின்னனுவியல் கூடகங்களில் தமது பங்களிப்பை சிறந்த முறையில் வழங்கியுள்ளது.

**அட்டவணை 10: இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு இலவசமாக பெற்றுக்கொண்ட ஊடக விளம்பரங்கள்**

| புதினப்பத்திரிக்கைகள் | தொகை (ரூபாய்.) |
|---|---:|
| டெய்லி நியூஸ் | 66,000.00 |
| திவயின | 114840.00 |
| லங்காதீப | 1018980.00 |
| ரிவிர | 428670.00 |
| சன்டே திவயின | 79860.00 |
| சன்டே லங்காதீப | 88128.00 |
| சன்டே சிலுமின | 176400.00 |



නව නිපැයුම් සඳහා ස්වභාවධර්මයෙන් පිටිවහලක්

ස්වභාවධර්මයේ වන සිදුවීම් දෙස විදුහුරු ඇසකින් බැලීම නව නිපැයුම්වලට මඟ පාදනු ඇති බව **දීපාල් සූරියආරච්චි** අවධාරණය කරයි.



# Innovation as a vital aspect of education

*By Deepal Sooriyaarachchi*

One significant aspect of our education system is its bias for academic studies rather than practical application. This has been exacerbated by the fact that the main public examinations of the school system becoming selection examinations rather than qualifying examinations. The consequence of this is the prevalence of the Tuition Culture which has reached epidemic proportions affecting the creativity of the students and the sensitivity to the environment. Promoting innovations becomes important in this context.

The Ministry of Education has issued a circular directing all class A B and B1 schools to establish Young Inventors Clubs with a view to pro- Teachers. Ideally there should be such inventors clubs in schools.

The success of inventors clubs depend very much on the dedication a as a distraction to the structured curricula based studies.

Schools are encouraged to conduct competitions at school levels,

பிரசுரிக்கப்பட்ட சில ஆக்கங்கள்

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தினால் முன்னெடுக்கப்பட்ட “அபே ஹபன்னு” நிகழ்ச்சித்திட்டத்தில் பள்ளிக்கூட மட்டத்தில் 20 புத்தாக்குனர்கள் அங்கீகரிக்கப்பட்டனர். அதுபோன்று இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் முன்னெடுக்கப்பட்ட “வியாபாரிக லோகய” நிகழ்ச்சித்திட்டத்தில் 30 புத்தாக்குனர்கள் அங்கீகரிக்கப்பட்டனர்.

விஞ்ஞான பவனியில் புத்தாக்கங்களை மேம்படுத்துதல்.







தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சினால் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்ட விஞ்ஞான பவனியில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு பங்குபெறல்

தேசத்திற்கு மகுடத்தில் பங்குபெறுகை

**அட்டவணை 11: புத்தாக்குனர்களின் மற்றும் புத்தாங்களின் விபரங்கள்**

| பங்குபற்றிய புத்தாக்குனர்களின் பெயர் | காட்சிப்படுத்தப்பட்ட புத்தாக்கங்கள் |
|---|---|
| எம்.ஏ.பிரின்ஸ் சந்ரசேன | Dipping Cooler |
| கலாநிதி.எஸ்.ஜே.வி.லெனதொர | Pneumatic Self Retaining Surgical Retractor |
| டபிள்யூ.பி.சுஜீவ விஜயசிங்க | Low Cost LED Light Fittings |
| இ.சந்துள்ள பத்மசிறி | Mobile Phone Based Microscope |
| பி.கே.மஹிபால | Cashew Shelling Machine |
| பிரபாத் சந்தரசிறி | String Hopper Machine |

அவர்களின் கூற்றுக்கமைய அவர்களுக்கு அநேக கட்டளைகள் பெறப்பட்டதாக கூறப்படுகிறது.

## 2.7 நிதி மானியங்கள்

கடந்த வருடத்தின் செயன்முறையினை இவ்வருடத்துடன் ஒப்பிட்டுப்பார்த்து கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகள் இவ்வருடத்திற்குரிய செயன்முறையில் திருத்தப்பட்டது. நிதி, தொழில்நுட்பவியல் மற்றும் சந்தைப்படுத்துகை வசதி ஆகிய உதவிகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு 2014.09.14 ஆம் திகதியன்று வெளியாகிய விளம்பரத்திற்கு 84 புத்தாக்குனர்கள் விண்ணப்பித்திருந்தனர். முதலில் அவர்களின் புத்தாக்கமானது சந்தைப்படுத்தல் செய்யப்படக்கூடிய செயலூட்டற் திறனை கொண்டுள்ளதா எனவும் மற்றும் புத்தாக்குனரின் வினைமுயலுமை என்பன நிபுணத்துவ குழு ஒன்றினால் முதலில் மதிப்பீடு செய்யப்பட்டது.

விண்ணப்பித்தவர்களில் குறும்பட்டியல் முறை பின்பற்றப்பட்டதினால் ஒதுக்கப்பட்டவர்கள் சம்பத் சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு பெயர் குறிப்பீடு செய்யப்பட்டனர். இவர்கள், ஒரு வியாபாரத்தை எவ்வாறு தொடங்குதல் மற்றும் ஒரு வியாபாரத்தை எவ்வாறு முகாமைத்துவம் செய்தல் என்பன தொடர்பில் இருக்கின்ற வேறுபட்ட விடயங்கள் பற்றிய ஒரு பயிற்சியை பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர் ஆகின்றனர். இப்பயிற்சியின் கால வரையரை 05 நாட்களாகும். இவர்கள் ஒரு வியாபார திட்டத்தை தயாரித்தல் வேண்டும் என்பதுடன் வெற்றிபெற்ற வினைமுயலுனர்களை உள்ளடக்கிய ஒரு குழாமினால் இத்திட்டம் பரிசீலிக்கப்படும்., அத்துடன் இதற்குரிய நிதி மானியமானது ஆணைக்குழுவினால் வழங்கப்படும்.

## அட்டவணை 12: புத்தாக்குனர்களினதும் மற்றும் புத்தாக்குனர் நிதியத்தினால் வழங்கப்பட்ட மானியத் தொகைகளிதும் பற்றிய சுருக்க விபரம்

| புத்தாக்குனர் | புத்தாக்கம் | நிதியீட்டின் நோக்கம் | கோரப்பட்ட தொகை (ரூபா.) | 1 ஆவது கட்டம் (ரூபா.) | 2 ஆவது கட்டம் (ரூபா.) | முன்னேற்றம் | மறித்து வைத்த தொகை (ரூபா.) |
|---|---|---|---|---|---|---|---|
| எல்.ஆர்.யூ.எச்.விஜயரத்ண | Ekel Extractor | இயந்திரத்தை விருத்தி செய்தல் | 25,000 | 25,000 | - | வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டது | |
| ஆசிரி டில்ஹான் டி சில்வா | Green Powered Educational Paper Toys | மூலப்பொருட்களை கொள்வனவு செய்தல் | 200,000 | 200,000 | - | வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டது | |
| ஆரியபால உக்வத்த | Onion Cutting Machine | ஐந்து இயந்திரங்களை உருவாக்க | 50,000 | 50,000 | - | வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டது | |
| ஹேமந்த திசாநயக்க | Injecting Solution for Corrosion Casting | மூலப்பொருட்களை கொள்வனவு செய்தல் | 100,000 | 100,000 | - | வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டது | |
| நெலும் உதயகாந்த்த | Peanut Harvesting Machine | இயந்திரத்தை விருத்தி செய்தல் | 50,000 | 50,000 | - | வெற்றியடைய முடியாததாக இனம்காணப்பட்டது | |
| கே.வீ.ஏ.விஜயவன்ச | Organic Insecticide | எண்ணெய் பிரித்தெடுப்பு இயந்திரம் கொள்வனவு | 250,000 | 240,000 | - | வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டது | |
| அமிதா டி சில்வா | Elevated Toilet Seat | மூலப்பொருட்களை கொள்வனவு செய்தல் | 1,400,000 | 639,429 | 570,547.05 | கள விஜயத்தின் பின் அறிக்கையினை பெற்றுக்கொண்டு இரண்டாவது கட்டத்திற்குரிய பணம் வழங்கப்பட்டது. எஞ்சியுள்ள தொகை கொடுக்கப்படல் வேண்டும். | 63,682.95 |
| கே.எம்.விஜயபால | Organic Fertilizer | மூலப்பொருட்களை கொள்வனவு செய்தல் | 1,200,000 | 737,200 | 325,000.00 | கள விஜயத்தின் பின் அறிக்கையினை பெற்றுக்கொண்டு இரண்டாவது கட்டத்திற்குரிய பணம் வழங்கப்பட்டது. எஞ்சியுள்ள தொகை கொடுக்கப்படல் வேண்டும். | 60,000.00 |

## 2.8 சர்வதேச மற்றும் தேசிய அங்கீகாரம்

டேசிஸ் விருதுபெற்ற வெற்றியாளர்கள், ஜெனீவா சர்வதேச கண்காட்சியில் பங்குபெறச் செய்வதற்கு பெயர் குறிப்பீடு செய்யப்பட்டார்கள். இதைவிட இரு புத்தாக்குனர்கள் தமது சொந்த விருப்பத்தின் கீழ் பங்குபற்றினர். அவர்களும் விருதுகளை வெற்றிகொண்டமையால் அவர்களுக்கும் பணத்தொகை பரிசானது ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது. அவர்கள் நாட்டிற்கு திரும்பிவரும்போது அவர்களின் அந்த வருகையில் அவர்களுக்கு BIA இல் வைத்து அதிமுக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்படும் வரவேற்பு வழங்கப்பட்டு அவர்களை அங்கீகரிக்கும் ஓர் வைபவமானது அமைச்சரின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டது.




ஜெனீவா விருதுபெற்ற
வெற்றியாளர்கள்

**அட்டவணை 13: ஜெனீவா விருதுபெற்ற வெற்றியாளர்கள்**

| புத்தாக்குனர்களின் பெயர் | புத்தாக்கம் | வெற்றிபெற்ற பதக்கங்கள் |
|---|---|---|
| ஐமன் பரூஸ் | Handy Fan Regulator | வெண்கலப் பதக்கம் |
| மனோஜ் கல்கமுவ மற்றும் கலாநிதி.ரிஷாட் முகம்மது | Improvised Condom Catheter with a draining channel | வெண்கலப் பதக்கம் |
| மஞ்சு குணவர்தன மற்றும் ஹெய்லி செனவிரட்ண | Hospital infection control system with non-chemical nano system | தங்கப் பதக்கம் |
| மஞ்சு குணவர்தன மற்றும் ஹெய்லி செனவிரட்ண | "Lab in the Toilet" –Diabetes early warning toilet system | தங்கப் பதக்கம் |

### 2014 ஆம் ஆண்டிற்கான சஹசக் நிமவும் இற்கு சகாய முன்னணி

சஹசக் நிமவும் கண்காட்சிக்கு முக்கியமாக தேவைப்படுவது மனித வலு ஆகும். கண்காட்சியின் தேவைப்பாடுகளை சந்திக்கவும் அதுபோன்று அதற்கு ஏற்படக்கூடிய செலவினங்களை முகாமைத்துவம் செய்யவும். இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது "சகாய முன்னணி" எனும் தலைப்பில் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்த தீர்மானித்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக பள்ளிக்கூடங்களை விட்டு அண்மையில் விலகியவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் அவர்கள் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் பதவியணியினருக்கு ஐந்து மாதங்களுக்கு தமது சகாயத்தை வழங்கினர். அவர்களுக்கு குழுவேலை, தொடர்பாடல், பணிகளைக் கையாளல் ஆகிய விடயங்களில் தமது திறனை விருத்திசெய்யக்கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததுடன் தமக்கு அளிக்கப்பட்ட பணிகளை ஒரு அழுத்தமான சூழ்நிலையிலும் மற்றும் ஒரு தலைமைத்துவத்தின் கீழும் முன்னெடுத்து செல்வதற்கு இயலும் தன்மை கொண்டவர்களாயினர்.

## 2.9 அமைப்பாண்மை அபிவிருத்தி

அதிக இடவசதியும் மற்றும் சிறந்த பொது மக்கள் இலகுவாக கண்டுபிடிக்கக்கூடிய ஒரு புதிய இடத்தில் ஆணைக்குழு கொண்டு செல்லப்பட்டது.

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கீழ் குறிப்பிடப்பட்ட தலைப்புகளில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களாவன அநேக பதவியணியிருக்கு வழங்கப்பட்டன.

- போக்குவரத்து முகாமைத்துவம்.
- தொழிற்பாட்டு மீளாய்வும் திட்டமிடலும்.
- நிதி ஒழுங்குவிதிகள்.
- வருடாந்த இருப்பு மதிப்பீடு மற்றும் பயனற்ற சாதனங்களை ஒதுக்கீடு செய்தல்.
- முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.




இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் குழுவினர்

# நிதிக்கூற்றுக்கள்
# 2014 (மீள்குறிப்பீடு செய்யப்பட்டது)
# 2014 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்குரியது

**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**

**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2014.12.31 இல் உள்ளவாறாக இல.ருபாய் | 2013.12.31 இல் உள்ளவாறாக இல.ருபாய் |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடப்பல்லா சொத்துக்கள்** | | | |
| சொத்து ஆதனம் கருவிகள் | | | |
| நடப்பல்லா சொத்துக்கள் | 5 | **8,950,301** | 8,412,881 |
| சொத்து ஆதனம் கருவிகள் | | **540,646** | 549,420 |
| கடன் முதலீட்டாளர் நிதியம் | | **16,458** | |
| **நடப்புச் சொத்துக்கள்** | | | |
| காகிதாயிகள் இருப்பு | 14 | **85,930** | - |
| கடன் முதலீட்டாளர் நிதியம் | | **9,417,723** | 9,534,221 |
| கழிக்க-ஐயக்கடன் ஒதுக்கீடு 100% | 12 | **(9,317,683)** | (9,534,221) |
| எரிபொருள் வைப்பு | | **100,000** | 100,000 |
| ஏனைய ஒப்பந்த சேவைகளுக்கான முற்பண கொடுப்பனவு | | **341,088** | 341,088 |
| வாடகை முற்பணம் | | **2,700,000** | - |
| அனர்த்த கடன் | | **150,540** | 158,780 |
| ஏனைய முற்பணங்கள் | | **136,633** | 136,633 |
| பண்டிகை முற்பணம் | | **15,300** | 8,300 |
| மீளளிக்கத்தக்க வைப்பு | 8 | **1,865,674** | - |
| தேர்தல் ஆணையாளர் | | **13,525** | 13,525 |
| தே.ப.கை.ப. அதிகார சபையிடமிருந்து பெறவேண்டியது | | **7,560** | 7,560 |
| பெறவேண்டிய ஏனையவைகள் | 7 | **845,080** | 1,840 |
| காசு மற்றும் வங்கி மீதி | 9 | **12,209,207** | 5,396,634 |
| **மொத்த சொத்துகள்** | | **28,077,982** | **15,126,660** |
| **நிதியம் மற்றும் பொறுப்புகள்** | | | |
| திரட்டப்பட்ட நிதியம் | | **15,179,410** | 7,180,782 |
| புத்தாக்குனர் நிதியம் | | **10,484,297** | 4,001,821 |
| **நடப்பல்லா பரிப்புகள்** | | | |
| பணிக்கொடை ஏற்பாடு | 6 | **1,835,385** | 1,567,979 |
| **நடப்பு பரிப்புகள்** | | | |
| நிலுவைச் செலவினங்கள் | 10 | **487,409** | 2,200,678 |
| ஏனைய கொடுக்கப்பட வேண்டியவைகள் | 11 | **91,481** | 175,400 |
| **மொத்த நிதியம் மற்றும் பொறுப்புகள்** | | **28,077,982** | **15,126,660** |

தயாரிப்பு .............................. பரிசீலனை - ...............................

11 இலிருந்து 12ஆம் பக்கம் வரையுள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் 5 இலிருந்து 10ஆம் பக்கம் வரையுள்ள
பக்கங்களிலுள்ள குறிப்புகள் என்பன இந்த நிதிக்கூற்றுக்களினை பூரணப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்டுள்ளன.
நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னளிப்படுத்துகைக்கு சபைப பணிப்பாளர்களே பொறுப்பாவார். இந்த நிதிக்கூற்றுக்கள்
சபைப் பணிப்பாளர்களால் அநுமதிக்கப்பட்துடன் அவர்களுக்காக கையொப்பமிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ………………………………………. | ………………………………………. |
| டபிள்யு.எஸ்.சி. குயன் குமார | டி.சி.எ. சத்துருகலசிங்க |
| உதவிப் பணிப்பாளர் (நிதி) | பணிப்பாளர் |
| திகதி -.......................... | திகதி -.......................... |

……………………………………….
தீபால் சுரியஅராய்ச்சி
ஆனணயாளர்

திகதி -..........................

## இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
## விரிவான வருமானக் கூற்று

| | குறிப்பு | 2014 (மீள்குறிப்பிடப் பட்டது இல.ருபாய் | 2013 (மீள்குறிப்பி டப்பட்டது இல.ருபாய் |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| **அரச பங்களிப்பு** | | | |
| அரச பங்களிப்பு - நடப்பு | | 18,004,000 | 16,530,000 |
| மூலதன மானியம் கடன்தீர்வு | 4 | 27,565,375 | 13,484,847 |
| ஏனைய வருமானம் | 1 | 311,526 | 1,141,825 |
| **மொத்த வருமானம்** | | **45,880,901** | **31,156,672** |
| **செலவினங்கள்** | | | |
| **நிர்வாகம் மற்றும் தாபிப்பு** | | | |
| தனி ஆள் வேதனாதிகள் | 2 | 9,903,848 | 7,461,298 |
| நிர்வாகம் மற்றும் தாபிப்பு செலவினங்கள் | 3 | 9,934,259 | 18,801,215 |
| பெறு.தேய்வு. நிலை. சொத். | 5 | 2,514,538 | 3,107,375 |
| பணிக்கொடை | 6 | 398,878 | 884,387 |
| **புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினங்கள்** | | | |
| புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினங்கள் | 4 | 27,565,375 | 13,484,847 |
| **மொத்த செலவினம்** | | **50,316,898** | **43,739,122** |
| **வருடத்திற்கான மிகை/(நட்டம்)** | | **(4,435,997)** | **(12,582,449)** |
| மிகை (நட்டம்) திரட்டப்பட்டக/கு இற்கு மாற்றப்பட்டது | | | |

**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**

**ஒப்புரவில் மாற்றம் பற்றிய கூற்று**

| | குறிப்பு | திரட்டப்பட்ட நிதியம் | புத்தாக்குனர் நிதியம் | மொத்த ஒப்புரவு |
|---|---|---|---|---|
| | | **இல.ரூபாய்** | **இல.ரூபாய்** | **இல.ரூபாய்** |
| 2013 ஜன. உள்ள. மீதி (மீள்குறிப்பு) | | 16,187,078 | 2,543,450 | 18,730,528 |
| 2013 இற்கான மிகை/நட்டம் | | (12,582,449) | - | (12,582,449) |
| மூலதன பெறுகை | | 17,061,000 | - | 17,061,000 |
| செய. நடவடி. மூல. பெறுகை கடன் தீர்வு | 4 | (13,484,847) | | |
| அமைச்சிடமிருந்து பங்களிப்பு | | - | 3,500,000 | 3,500,000 |
| புத்தாக்குனர்களுக்கு விநியோகம் | | | (2,041,629) | (2,041,629) |
| **2013 டிச.31 இல் உள்ள மீதி (மீள்குறி)** | | **7,180,782** | **4,001,821** | **24,667,450** |
| 2014 ஜன. உள்ள. மீதி (மீள்குறி) | | 7,180,782 | 4,001,821 | 11,182,604 |
| 2014 ஆம் ஆண்டிற்து மிகை/நட்டம் | | (4,435,997) | - | (4,435,997) |
| மூலதன பெறுகை | | 40,000,000 | - | 40,000,000 |
| செய. நடவடி மூல. பெறுகை கடன் தீர்வு | 4 | (27,565,375) | | |
| அமைச்சிடமிருந்து பங்களிப்பு | | - | 8,000,000 | 8,000,000 |
| புத்தாக்குனர்களுக்கு விநியோகம் | | | (1,517,524) | (1,517,524) |
| **2014 டிச. 31இல் உள்ள மீதி.** | | **15,179,410** | **10,484,297** | **53,229,083** |

**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**
**காசுப்பாய்ச்சல் கூற்று**

| டிசம்பர் 31இல் முடிவுற்ற வருடத்திற்குரியது | | 2014 இல் உள்ளவாறாக இல.ரூபாய் | 2013 இல் உள்ளவாறாக இல.ரூபாய் |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்கான காசுப்பாய்ச்சல்** | | | |
| மிகை/(நட்டம்) | | (4,435,997) | (12,582,449) |
| காசல்லாத பெயர்ச்சிகள் | | | |
| பெறுமானத் தேய்வு | 2,514,538 | | 3,107,374 |
| மூலதன மானியம் கடன்தீர்வு | (27,565,375) | | (13,484,847) |
| பணிக் கொடை ஏற்பாடு | 398,878 | | 884,388 |
| விற்பனையில் நட்டம் (அலுவலக பொருத்) | 74,840 | | (12,600) |
| விற்பனையில் இலாபம் (அலுவலக கருவி) | (12,040) | | |
| ஐயக்கடன் ஒதுக்கீடு | (216,538) | (24,805,697) | 9,534,221 |
| **சீராக்கங்களாவன** | | | |
| காகிதாயி இருப்புமளில் மாற்றம் | | (85,930) | |
| வாடகை முற்பண கொடுப்பனவுகளில் மாற்றம் | | (2,700,000) | - |
| பண்டிகை முற்பணங்களில் மாற்றம் | | (7,000) | 1,000 |
| நிலுவைச் செலவினங்களில் மாற்றம் | | (1,713,269) | (3,610,800) |
| ஏனைய பெறுகைகளில் மாற்றம் | | (843,240) | (1,840) |
| மீளளிக்கத்தக்க வைப்புகளில் மாற்றம் | | (1,865,674) | |
| ஏனைய கொடுப்பனவுகளில் மாற்றம் | | (83,919) | |
| | | (36,540,727) | (16,165,554) |
| பணிக்கொடை கொடுப்பனவு | | 131,472 | 124,920 |
| தொழிற்பாட்டு செயற் தேறிய காசுப்பய்ச்சல் | | **(36,672,199)** | (16,290,474) |
| **முதலீட்டு செயற் காசுப்பய்ச்சல்** | | | |
| சொத்து ஆதனம் மற்றும் கருவிகள் கொள்வனவு | | (2,964,338) | (1,247,250) |
| பொருத்துக்களை பிரித்தெடுப்பதற்கான செலவினம் | | (162,460) | |
| ஆதனம் மற்றும் கருவிகளிலிருந்து விற்பனை வருமபடி | | 12,040 | 12,600 |
| புத்தாக்குனர் கடன் நிதியம் மீள் கொடுப்பனவு | | 100,040 | 100,040 |
| அனர்த்த கடன் வழங்கல் | | (252,160) | (354,750) |
| அனர்த்த கடன் மீள் கொடுப்பனவு | | 269,175 | 293,640 |
| | | **(2,997,703)** | (1,195,720) |
| **நிதிச் செயற்பாடுகளிவிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| மூலதன மானியம் கிடைக்கப்பெற்றது | | 40,000,000 | 17,061,000 |
| கிடைக்கப்பெற்ற நிதியம் | | 8,000,000 | 3,500,000 |
| புத்தாக்குனரின் ஊடாக நிதியம் | | (1,517,524) | (2,041,629) |
| | | **46,482,476** | 18,519,371 |
| **வருட காலப்பகுதியில் காசும் காசுக்கு சம. அதி/குறைவு** | | 6,812,573 | 1,033,177 |
| **வருட காலப்பகுதியில் காசும் காசுக்கு சமமானவையும்** | | 5,396,633 | 4,363,456 |
| **வருட இறுதியில் காசும் காசிற்கு சமமானவையும்** | | **12,209,207** | **5,396,633** |
| **கணக்கிலக்கம்** 033-1-001-0-1791066 | | 4,503,538 | 70,250 |
| **கணக்கிலக்கம்** 033-1-001-0-1791065 | | 7,705,669 | 5,326,384 |
| | | 12,209,207 | 5,396,633 |

## 2014 டிசம்பர் 31இல் முடிவுற்ற வருடத்திற்கான குறிப்புகள்

| | | 2014 (மீள்குறிப்பிடப்பட்டது இல.ரூபாய் | 2013 (மீள்குறிப்பிடப்பட்டது இல.ரூபாய் |
|---|---|---|---|
| 1 | **ஏனைய வருமானம்** | | |
| | அனர்த்த கடன் வட்டி | 29,291 | 27,212 |
| | கடன்வட்டி (புத். கடன் நிதியம்) | 25,000 | 25,000 |
| | ஏனைய வருமானம் | 28,656 | 1,077,013 |
| | அலுவலக கரு. விற்பனை வரும்படி | 12,040 | 12,600 |
| | ஐயக்கடன்களுக்கு மேலதிக ஒதுக்கீடு | 216,538 | |
| | | **311,526** | **1,141,825** |
| 2 | **தனி ஆள் வேதனாதிகள்** | | |
| | பதவியணி வேதனாதிகள் | | |
| | சம்பளமும் கூலிகளும் | 4,522,265 | 3,231,373 |
| | வாழ்க்கைப் படிசெலவினம் | 1,821,724 | 1,243,220 |
| | விசேட படி | 924,613 | 572,612 |
| | பதில் கடமையாற்றல் படி | - | 178,042 |
| | | 7,268,602 | 5,225,247 |
| | சம்பளமற்ற விடுமுறை கட்டணம் | (29,618) | (18,038) |
| | | 7,238,983 | 5,207,209 |
| | பங்க. திட்டங். வரைய. செய்ய தொழில் தருனர் பங்க. | | |
| | ஊழியர் சேமலாப நிதியம் | 1,085,230 | 762,134 |
| | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 218,985 | 151,952 |
| | மேலதிக நேரம், விடுமுறை கொடுப்பனவு | 452,379 | 475,193 |
| | ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு | 908,271 | 864,810 |
| | | **9,903,848** | **7,461,298** |
| 3 | **நிர்வாக மற்றும் தாபிப்பு செலவினம்** | | |
| | பிரயாணம் - உள்ளூர் | 75,203 | 101,388 |
| | காகிதாயிகள் | 140,040 | 327,381 |
| | எரிபொருள், மசகு எண்ணெய் | 573,166 | 743,483 |
| | பாவனைகள் | 142,220 | 94,780 |
| | வாகன திருத்துகை , பேணல் | 923,785 | 289,266 |
| | அலுவலக கருவி திருத்துகை, பேணல் | - | 5,096 |
| | வாடகை | 5,540,913 | 5,303,900 |
| | தொடர்பாடல் | 315,473 | 271,803 |
| | தபால்கட்டணம் | 13,790 | 9,255 |
| | கணக்காய்வு கட்டணம் | 120,000 | 182,000 |

| | | |
|---|---|---|
| மின் கட்டணம் | 551,534 | 626,474 |
| நீர் கட்டணம் | 63,529 | 53,278 |
| ஏனைய ஒப்பந்த சேவைகள் | 671,758 | 657,538 |
| துப்புரவாக்கும் செலவினம் | 172,595 | 162,000 |
| விருந்துபசார செலவினங்கள் | 126,621 | 108,123 |
| புதினப் பத்திரிகைகளும் பருவ சஞ்சிகைகளும் | 32,240 | 32,435 |
| ஏனைய நிர்வாக செலவினம் | 396,551 | 298,794 |
| ஐயக் கடன் பட்டோர் | - | 9,534,221 |
| பொருத்துகள் விற்பனையில் நட்டம் | 74,840 | - |
| | **9,934,259** | **18,801,215** |
| **4** புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினங்கள் | | |
| ஜனாதிபதி விருது வைபவம் | 2,161,369 | 438,220.20 |
| சஹசக் நிமவும் - கண்காட்சி, போட்டி | 15,884,019 | 9,365,072.75 |
| பள்ளிக்கூட புத்தாக்குனர் சங்கங்கள் | 1,554,532 | 1,597,488.02 |
| புத்தாக்குனர்களுக்கு தேசிய கருத்தரங்கு | 264,548 | 210,610.00 |
| சு. தொ. வ. நிகழ்ச்சிக்கிட்டம் | 1,713,205 | 443,774.44 |
| சர். கண்காட்சியில் புத். பங்கு கொள்ளல் | 1,050,197 | 805,444.17 |
| வலைத்கடப்பீட முகாமை | 38,071 | 20,571.26 |
| தேசத்திற்கு மகுடம் | 162,276 | 450,791.50 |
| மனித வள அபிவிருத்தி | 292,245 | 152,875.00 |
| நிதி. தொழில்நுட்ப உதவி (BMICH) | 4,444,913 | - |
| | **27,565,375** | **13,484,847** |

5 **நிலை.சொத்.பெ.தே.**

| | அலு.கருவி | தள.பொரு. | மூலவகை மாதிரி | நூல. புத. | வாகனம் | கண்காட்சி சாவடி | எறியம்,நிழற்பட பெட்டி | கட்புல செவிப்புல நாடா | அலு. பொரு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல.ரூ 000 | இல.ரூ 000 | இல.ரூ 000 | இல.ரூ 000 | இல.ரூ 000 | இல.ரூ 000 | இல. ரூ 000 | இல.ரூ 000 | இல.ரூ 000 | இல.ரூ 000 |
| ***கொள்விலை*** | | | | | | | | | | - |
| 2013.01.01 இல் உள்ளவாறான மிகுதி | 9,921,950 | 804,697 | 216,300 | 193,357 | 19,917,161 | 165,120 | 1,715,069 | 162,000 | 1,016,869 | 34,112,523 |
| வருடகாலப்பகுதியில் சேர்ப்பு | 1,082,250 | | | | | | 165,000 | | | 1,247,250 |
| வருடகாலப்பகுதியல் விற்பனை ப்பகுதியில் விற்பனை | (850,400) | | | | | | (35,125) | | | (885,525) |
| **2013.12.31 இல் உள்ள மிகுதி (மீள்குறிப்பீடு)** | **10,153,800** | **804,697** | **216,300** | **193,357** | **19,917,161** | **165,120** | **1,844,944** | **162,000** | **1,016,869** | **34,474,248** |
| வருடகாலப்பகுதியில் சேர்ப்பு | 1,112,276 | - | 85,000 | - | 81,030 | - | - | - | 1,796,032 | 3,074,338 |
| வருடகாலப்பகுதியில் விற்பனை | (827,128) | - | - | (193,357) | - | - | - | - | (978,869) | (1,999,354) |
| **2013.12.31 இல் உள்ள மிகுதி (மீள்குறிப்பீடு)** | **10,438,948** | **804,697** | **301,300** | **-** | **19,998,191** | **165,120** | **1,844,944** | **162,000** | **1,834,032 #** | **35,549,232** |
| ***திரட்டப்பட்ட பெ. தேய்வு*** | | | | | | | | | | |
| 2013.01.01 இல் உள்ளவாறான மிகுதி | 8,879,811 | 630,198 | 183,980 | 188,541 | 11,052,982 | 162,117 | 1,715,069 | 134,710 | 892,109 | 23,839,517 |
| வருடத்திற்கான கட்டணம் | 447,624 | 51,708 | 11,081 | 3,509 | 2,479,040 | 3,003 | 5,500 | 12,635 | 93,275 | 3,107,375 |
| விற்பனை | (850,400) | | | | | | (35,125) | | | (885,525) |
| **2013.12.31 இல் உள்ள மிகுதி (மீள்குறிப்பீடு)** | **8,477,034** | **681,907** | **195,061** | **192,050** | **13,532,022** | **165,120** | **1,685,444** | **147,345** | **985,384** | **26,061,367** |
| வருடத்திற்கான கட்டணம் | 624,700 | 34,508 | 12,198 | 1,307 | 1,774,973 | - | 33,000 | 3,030 | 30,822 | 2,514,538 |
| விற்பனை | (827,128) | - | - | (193,357) | - | - | - | - | (956,489) | (1,976,974) |
| **2013.12.31 இல் உள்ள மிகுதி (மீள்குறிப்பீடு)** | **8,274,606** | **716,415** | **207,259** | **-** | **15,306,995** | **165,120** | **1,718,444** | **150,375** | **59,717 #** | **26,598,931** |
| **தேறிய புத்தக பெறுமதி** | | | | | | | | | | |
| 2013.12.31 இல் | 1,676,765 - | 122,790 # | 21,239 # | 1,308 # | 6,385,139 | - - # | 159,500 # | 14,655 # | 31,485 # | 8,412,881 |
| 2014.12.31 இல் | 2,164,342 - | 88,282 # | 94,041 # | - # | 4,691,196 | - - # | 126,500 # | 11,625 # | 1,774,315 # | 8,950,301 |

| | | | 2014 மீள்குறிப்பீடு இல.ரூ | 2013 மீள்குறிப்பீடு இல.ரூ |
|---|---|---|---|---|
| 6 | | **பணிக்கொடை** | | |
| | | சனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | 1,567,979 | 808,511 |
| | | வருடத்திற்கான ஒதுக்கீடு | 398,878 | 884,387 |
| | | வருடத்தில் பணிக்கொடை கொடுப்பனவு | (131,472) | (124,920) |
| | | டிசம்பர் 1 இல் உள்ளவாறான மிகுதி | 1,835,385 | 1,567,979 |
| 7 | | **பெறுகைகள்** | | |
| | | ஏனைய பெறுகைகள் | - | 1,840 |
| | ஆ | இளை.புத். ஆணைக். பெறப்படவேண்டியவை | 514,080 | - |
| | | சஹசக் நிமவும் இற்கு பெறப்படவேண்டியவை | 331,000 | - |
| | | | 845,080 | 1,840 |
| 8 | | **மீளளிக்கத்தக்க வைப்புக்கள்** | | |
| | | SLECC | 815,674 | - |
| | | வாடகை | 1,050,000 | - |
| | | | 1,865,674 | - |
| 9 | | **காசு மற்றும் வங்கி மீதிகள்** | | |
| | | காசுப் புத்தகம்-033100101791066 | 4,503,538 | 70,250 |
| | | காசுப் புத்தகம்-03312101791065 | 7,705,669 | 5,326,384 |
| | | | 12,209,207 | 5,396,634 |
| 10 | | **நிலுவை செலவினங்கள்** | | |
| | | சம்பள அதிகரிப்பும் விசேட படியும் | 8,033 | 3,914 |
| | | எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் | 4,440 | 12,100 |
| | | விடுமுறை மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு | 34,022 | - |
| | | புதினப்பத்திரகை மற்றும் பருவ சஞ்சிகைகள் | 5,560 | 2,720 |
| | | தொடர்பாடல் செலவினம் | 38,819 | 20,698 |
| | | மின்சாரம் | 33,017 | 47,023 |
| | | நீர் | - | 3,461 |
| | | கணக்காய்வுக் கட்டணம் | 302,000 | 182,000 |
| | | துப்பரவாக்கல் செலவினம் | - | 13,500 |
| | | ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு | 55,800 | - |
| | | இளை.புத் ஆணைக்குழு நிகழ்ச்சித்திட்டம் | - | 1,370,880 |
| | | சஹசக் நிமவும் | 5,718 | 544,382 |
| | | | 487,409 | 2,200,678 |
| 11 | | **ஏனைய பெறுகைகள்** | | |
| | | PAYE வரி | 9,400 | 23,400 |
| | | ஏனைய பெறுகைகள் | - | 152,000 |
| | | கொடுக்கப்படவேண்டிய மறித்துவைத்தல் பணம் | 82,081 | - |
| | | | 91,481 | 175,400 |

**2014 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)**

| | | 2014 | 2013 மீள்குறிப்பீடு |
|---|---|---|---|
| | | இல.ரூ | இல.ரூ |
| 12 | **100% ஐயக்கடன் ஒதுக்கீடு** | | |
| | சனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | 9,534,221 | - |
| | **வருடத்திற்கான ஒதுக்கீடு** | | |
| | புத்தாக்குனர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் | (216,538) | 9,534,221 |
| | டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி | 9,317,683 | 9,534,221 |
| 13 | **அரச மானியம்** | | |
| | அரச மானியத்தின் சுருக்க விபரம் | | |
| | இலங்கை கணக்கியற் கட்டளைச் சட்டம் 24 ற்கு அமைவுற | | |
| | நடப்பு மானியம் | 18,004,000 | 16,530,000 |
| | மூலதன மானியம் | 40,000,000 | 17,061,000 |
| | | 58,004,000 | 33,591,000 |
| 14 | **இருப்பு மதிப்பீடு (SLPSAS 9)** | | |
| | முதல் வந்தது முதல் செல்லல் (FIFO) அடிப். காகிதாயிகள் இருப்பு மதிப்பி. | | |
| | சனவரி 1 இல் மிகுதி | - | - |
| | வருடகாலத்தில் கொள்வனவு | 225,970 | - |
| | வருடகாலத்தில் செலவினம் | 140,040 | - |
| | டிசம்பர் 1 இல் மிகுதி | 85,930 | - |

15 **தொடர்புடைய நபர்களின் வெளிப்படுத்துகை**

2014 ஆம் ஆண்டில் இத்.கொடுக். வாங். எதுவுமில்லை

16 **அறிக்கை காலப்பகுதியின் பின் நிகழ்வுகள்**

அறிக்கை காலப்பகுதியின் பின் எதுவித நிகழ்வுகளும் இல்லை

17 HNB அதூரன்ஸ் நிறுவகம் தனது 50,000.00 பெறுமதியான காசோலைகளை வழங்கி சஹசக் நிமவும் போட்டியின் வெற்றியாளர்களை அநுசரனை செய்தது.

| வருடம் | அரச பங்களிப்பு மூலதனம் |
|---|---|
| | |
| 1991 | 163,050.00 |
| 1992 | 1,700,000.00 |
| 1993 | - |
| 1994 | 250,000.00 |
| 1995 | 196,000.00 |
| 1996 | 113,500.00 |
| 1997 | 757,000.00 |
| 1998 | 1,700,000.00 |
| 1999 | 290,000.00 |
| 2000 | 4,500,000.00 |
| 2001 | 2,870,000.00 |
| 2002 | 700,000.00 |
| 2003 | 2,500,000.00 |
| 2004 | 621,000.00 |
| 2005 | 5,997,000.00 |
| 2006 | 33,991,000.00 |
| 2007 | 37,100,000.00 |
| 2008 | 24,106,000.00 |
| 2009 | 15,765,000.00 |
| 2010 | 4,500,000.00 |
| 2011 | 6,151,010.00 |
| 2012 | 21,562,000.00 |
| 2013 | 17,061,000.00 |
| 2014 | 40,000,000.00 |

## கணக்கியல் கொள்கைகள் மற்றும் செயன்முறைகள்

**01.** 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தினூடாக இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு தாபிக்கப்பட்டது.

**02. ஒப்புமைக்கூற்று**

ஆணைக்குழுவானது இலங்கை அரசதுறை கணக்கியல் கட்டளைச் சட்டங்களுடன் ஒத்திணங்குகின்றது.

**03. தயாரிப்பின் அடிப்படை**

இலங்கை அரசதுறை கணக்கியல் கட்டளைச் சட்டங்களுடன் ஒத்திணங்கும் வகையில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களாவன தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் மாறாது வரலாற்றுக் கிரய அடிப்படையில் அவை பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**04. செயற்பாடும் நாணயங்களின் முன்னளிப்பும்**

நிதிக்கூற்றுக்களாவன, நிறுவனத்தின் செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் நாணயங்களான இலங்கை ரூபாயில் தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை ரூபாயில் முன்னளிப்புச் செய்யப்பட்டுள்ள நிதியியல் தகவல்களாவன அண்மித்த ரூபாய்களில் அண்ணளவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

**05. நிதியம்**

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு அரசினால் பங்களிப்புச் செய்யப்படும் நிதியமானது அரசின் வருடாந்த மதிப்பீடுகளின் கீழ்,

1. நடப்பு செலவினத்திற்கான நிதியம்
2. மூலதன செலவினத்திற்கான நிதியம்

என்ற இரு பெயர்களில் காட்டப்படுகின்றது. நடப்பு செலவினம் தொடர்பில் கொடுக்கப்படும் மானியமானது வருமான செலவின கணக்கிற்கு எடுத்துச் செல்லப்படும் அதேவேளையில் மூலதன செலவினத்திற்கு வழங்கப்படும் மானியமானது மூலதன கணக்கிற்கு நேரடியாக எடுத்துச்செல்லப்படும். இந்த மூலதன கணக்கானது திரட்டப்பட்ட நிதியம் என்ற பெயரினாலும் அழைக்கப்படும்.

ஆணைக்குழுவின் நடப்பு செலவினமானது வருமான செலவின கணக்கில்

1. நிர்வாகம் மற்றும் தாபிப்பு செலவினம்
2. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினம்

ஆகிய கணக்குகளில் காட்டப்படும்.

இறுதியாக கூறப்பட்ட செலவினமானது 1979 ஆம் ஆண்டு 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் குறிக்கோள்களை ஆணைக்குழுவானது பூரண நிறைவுசெய்யும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழுவினால் செலவழிக்கப்பட்டது.

## 06. பெறுமானத்தேய்வு

நிலையான சொத்துக்களாவன அதனது முதல் நிலைக்கட்டத்தின் அது கொள்வனவு செய்யப்பட்ட கிரய விலையில் இணம் காணப்படுவதுடன் "நேர்கோட்டு முறையில்" பெறுமானத்தேய்வு செய்யப்படும். சொத்தானது அதனது மதிப்பீடு செய்யப்பட்ட பாவனைக் காலத்தின் இறுதியில் பதிவளிப்பு செய்யும்பொருட்டு கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட பெறுமானத்தேய்வு வீதங்கள் அக்குறிப்பிட்ட நிலையான சொத்து தொடர்பில் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**வீதம்**

| | | |
|---|---|---|
| அ) | தளபாடமும் பொருத்துக்களும் | 15% |
| ஆ) | அலுவலக கருவிகள் | 20% |
| இ) | மூலவகை மாதிரிகளும் பெயர் பலகைகளும் | 10% |
| ஈ) | நூலக புத்தகங்கள் | 10% |
| உ) | வாகனங்கள் | 20% |
| ஊ) | கண்காட்சி சாவடிகள் | 25% |

2014 சனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்தே அதாவது தொடக்கத்திலிருந்தே வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் இலங்கை பொதுத்துறை கட்டளை சட்டத்தின் 07 ஆனது பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

## 07. காசுப்பாய்ச்சல்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் காசுப்பாய்ச்சல் கூற்றானது இலங்கை அரசதுறை கணக்கியல் கட்டளைச் சட்டத்தின் இரண்டிற்கு ஒத்திணங்கும் வகையில் நேரடியற்ற முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 08. ஓய்வூதிய பணிக்கொடை

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்திலுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்றவகையில் பணிக்கொடை கொடுப்பனவிற்கான ஒதுக்கீடானது மேற்கொள்ளப்படுகின்றது.

## 09. திரட்டப்பட்ட நிதியம் / அநுசரணையாளர்கள் மற்றும் மூன்றாம் நபர்களிடமிருந்து நன்கொடை

ஆணைக்குழுவானது, அநுசரணையாளர்கள் மற்றும் மூன்றாம் நபர்களின் ஒதுக்கீட்டு கணக்குகளிலிருந்து நிதியம் சேகரிக்கின்றது.

## 10. இருப்பு மதிப்பீடு

இலங்கை அரசதுறை கணக்கியல் கட்டளைச் சட்டம் 09 ற்கு அமைவுற முதல் வந்தது முதல் செல்லல் என்ற அடிப்படையில் இறுதிச் சரக்கிருப்பானது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

மம அංකය / எனது இல. / My No. } எம்ஸன்2/எப்/எஸ்எல்ஆர்சீ/1 | ඔබේ අංකය / உமது இல. / Your No. } | දිනය / திகதி / Date } 2015 யூன் 22

ஆணையாளர்,

இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு

**இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குநரை ஊக்குவித்தல் அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று ஆணைக்குழுவின் ஆணையாளருக்கு 2015 மார்ச் 20 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1 அபிப்பிராயம்

---

இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

---

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் படி நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள், நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் என்பன திரவத் தன்மை ஒழுங்கு முறையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

---

2010 மற்றும் 2011 ஆம் ஆண்டு முதல் நடைமுறைச் சொத்தின் கீழ் பெறவேண்டிய மீதியாகக் காண்பிக்கப்பட்ட இரண்டு கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 477,720 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் சம்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2014 யூலை 04 ஆந் திகதிய கொள்வனவு செயற்கோவைக்கான மேலதிக 28 ஆம் இலக்கத்தின் 2.14.1 ஆம் பந்தி | ஆணைக்குழுவிற்காக இரண்ட வருட காலப்பகுதிக்கு கட்டிடமொன்றை வாடகைக்குப் பெறும் போது திறந்த போட்டியாளர் கேள்வி கோரப்படாமல் சந்தை விலையினைப் பின்பற்றி மாதாந்தம் ரூபா 600,000 படி வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய கொள்வனவு சுற்றறிக்கைக் கோவையின் 8.9.1(ஆ) | ஆணைக்குழுவால் அலுவலகக் கட்டிடத்தை வாடகைக்குப் பெற்றமை தொடர்பாக முறையான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் மதிப்பீட்டு அறிக்கையும் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் நிதி விளைவுகள் ரூபா 4,435,997 பற்றாக்குறையைக் காண்பித்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 12,582,449 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 8,146,452 தொகையால் குறைவடைந்தமையைக் காண்பித்தது. முன்னைய ஆண்டில் ரூபா 9,534,221 தொகையான ஐயக் கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக அவ்வாறான ஏற்பாடு இன்மையினால் இப்பற்றாக்குறை குறைவடைந்தமைக்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் நடைமுறைச் சொத்துக்களில் 200 சதவீத அதிகரிப்பைக் காண்பித்ததுடன், அதற்காக புத்தாக்குநர்களுக்கு வழங்குவதற்காக தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 8,000,000 தொகை பிரதான காரணமாக இருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி பாடசாலை புத்தாக்கங்களை அமுல்படுத்துவதற்காக 8 கருத்தரங்குகள் நடாத்த வேண்டிய போதிலும் 4 கருத்தரங்குகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) புத்தாக்குநர்களின் செயற்திட்டத்திற்காக முதலீட்டை மேற்கொள்கின்ற முதலீட்டிற்காக (Angel Investors) ரூபா 10 மில்லியன் வரிச் சலுகை வழங்குவதற்கு முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குநர்களை ஊக்குவித்தல் அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆணைக்குழுவின் அதிகாரம் மற்றும் நோக்கங்களுக்கிடையே மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்படாத செயற்பாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) "பேடன்ட்" அனுமதிப்பத்திரத்தை பிணையாக வைத்து அரசாங்க அல்லது ஏனைய நிறுவனங்களிலிருந்து கடன் பெறக்கூடிய வகையில் வணிக ரீதியில் பெறுமதியுடைய புத்தாக்கங்களுக்கு பரிந்துரை வழங்குதல்.

(ii) அதிகாரம் வழங்கப்பட்ட புத்தாக்குனர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட புத்தாக்கங்கள் மற்றும்

ஆராய்ச்சிகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் பொது ஆராய்ச்சிக் கூடமொன்றை ஆரம்பித்தலும் நடாத்திச் செல்லலும்.

(iii) இலங்கையின் இளைஞர்களுக்கிடையே புத்தாக்கங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் தைரியம் ஊட்டுவதற்காக கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் ஆக்கத்திறனான சங்கங்களை அமைத்தல்.

(ஈ) வருடாந்தம் நடாத்தப்படுகின்ற புத்தாக்கங்களின் பூர்த்திக் கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழாவிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 15,884,019 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இந்தக் கண்காட்சி தொடர்பாக சமூக விழிப்புணர்வு ஆகக் குறைந்த மட்டத்தில் இருந்த காரணத்தால் நிகழ்ச்சித் திட்ட வடிவமைப்பாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட அளவில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) 2006 யூன் 06 அந் திகதிய 2006/23 ஆம் இலக்க கல்வி அமைச்சுச் சுற்றறிக்கையின் படி பாசாலை மாணவர்களின் புத்தாக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி ஒவ்வொரு வருடத்திலும் பாடசாலை மட்டத்தில் புத்தாக்கங்களின் கண்காட்சியொன்றை நடாத்தி சான்றிதழ் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

புத்தாக்குநர்களாக இனங்காணப்பட்ட 12 நபர்களுக்கு புத்தாக்கங்களை மேம்படுத்துவதற்காக 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் போது உடன்படிக்கை கைச்சாத்திடாமல் ரூபா 10,200,000 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்தது. அந்தக் கடன் வழங்கும் போது அவர்களின் "பேடன்ட்" அனுமதிப்பத்திரத்தின் மூலப் பிரதி பிணையாக வைக்கப்பட வேண்டிய போதிலும் 8 பேர்களினது "பேடன்ட்" அனுமதிப்பத்திரம் பிணையாக வைக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 பதவியணியினர் முகாமைத்துவம்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறைவேற்று தரமற்ற பதவியணியில் 03 வெற்றிடங்கள் காணப்பட்டன.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டில் மதிப்பிடப்பட்ட செலவினத்தையும் உள்ளபடியான செலவினத்தையும் ஒப்பீடு செய்த போது 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை மிகை மதிப்பீட்டு முரண்கள் ஏற்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன் நிருவாகம்
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) பதவியணியினர் முகாமைத்துவம்

ஒப்பம்:- டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)